20

# குமரிமலர்

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

லை அணா 8

# கோயமுத்தூர் முருகன் மில்ஸ் லிமிடெட்

மேட்டுப்பாளையம் ரோடு

கோயமுத்தூர்

●

அங்கீகரிக்கப்பெற்ற மூலதனம் : ரூ. 15,00,000

செலுத்தப்பெற்ற மூலதனம் ரூ. 12,81,300

**20,300 கதிர்கள்**

**100 தறிகள்**

விரைவில் **4700** கதிர்கள் வரவிருக்கின்றன

●

உயர்ந்த ரக 20, 80 நம்பர் நூல்கள் உற்பத்தி செய்யப் பெறுவதோடு, கவர்ச்சியான லாங்கிளாத்தும், மல்லும், சலவை ரகத்திலும் கலர் ரகத்திலும் உற்பத்தி செய்யப் பெறுகின்றன.

டெக்ஸ்மார்க் நம்பர் : **608**

---

மானேஜிங் ஏஜண்டுகளும் செக்ரடரிகளும் :

டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் சன்ஸ் அன் கம்பெனி



பொரபுதூரிலுள்ள தியான புத்தர்.

●

எம். கே. கிருஷ்ண செட்டியார்

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்.

நம்பிக்கை

நாணயம்

உத்தரவாதம்

மருந்துகள் கிடைக்குமிடம்

## SP. M. மெடிக்கல் மார்ட்

15 கீழச் சித்திரை வீதி

மதுரை

பிராஞ்சுகள் :

97, பாலேஸ் ரோடு - மதுரை

43, கிருஷ்ணராயர் தெப்பக்குளத் தெரு - மதுரை

எங்கள் பாலேஸ் ரோடு பிராஞ்சில் பகல், இரவு, எல்லா நேரங்களிலும் மருந்துகள் கிடைக்கும்.


அருணகிரிவிலாஸ்
சீயக்காய் பவுடர்
N. ஆறுமுகம் பிள்ளை.
காரைக்குடி.
B.S

* "திரும்புமிடமெல்லாம் கலைத்திறன் நிறைந்த கண்காட்சி" என்று புகழுகிறார்கள் மதுரைக் கோபுரங்களை !

* அதுபோல புகழடைந்த அழகான வேலைப் பாடமைந்த புதுப்புது டிசைன்களில் பவுன் நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் நம்பிக்கை யுடன் கிடைக்கக்கூடிய இடம்

**R. ராமநாதன் செட்டியார்**

**40-41, கீழ ஆவணி மூல வீதி,**

**மதுரை.**

போன் 200 தந்தி 'ஜுவல்லரி'

"உங்கள் நம்பிக்கை, எங்கள் வளர்ச்சி"

# பாங்க் ஆப் மதுரை லிமிடெட்,

## மதுரை.

ஸ்தாபிதம்: 1943.

கிளைகள்: புதுக்கோட்டை, சேலம், கோயமுத்தூர். மற்றும் எல்லா முக்கிய நகரங்களிலும், வியாபார ஸ்தலங்களிலும் ஏஜென்ஸிகள் உண்டு.

டைரக்டர்களின் போர்டு.

**ஸ்ரீ கருமுத்து தியாகராசன், சேர்மன்**

ஸ்ரீ வ. ராம. வள்ளியப்ப செட்டியார்

ஸ்ரீ நா. அ. அண்ணமலை செட்டியார்

ஸ்ரீ உ. ராம. மெ. சுப. சேவு. அ. அண்ணமலை செட்டியார்

மூலதனமும் இதர நிதிகளும்:

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்டது | ரூ. | 25,00,000 |
| வழங்கப்பட்டது | ரூ. | 15,00,000 |
| செலுத்தப்பட்டது | ரூ. | 11,25,000 |
| சேமிப்பு நிதிகள் | ரூ. | 3,04,300 |
| டெபாஸிட்டுகள் 31-12-55ல் | ரூ. | 2,55,91,400 |
| மொத்த அலுவல் நிதி 31-12-55ல் | ரூ. | 2,76,78,700 |

ரூ. 5/-லிருந்து எங்கள் சேவிங்ஸ் கணக்கில் ஏற்றுக்கொள்ளுகிறோம்—வருடம் ஒன்றுக்கு 3% வட்டி

3, 6, 12, 24 மாதங்களுக்கு பிக்சட் டிபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படும்—வட்டி விகிதங்கள் விண்ணப்பத்தின் மேல்.

மற்றும் டிராப்டுகள் விற்பது, தபால், தந்தி மூலம் பணம் அனுப்புவது, சிறந்த செக்யூரிட்டிகளின் பேரில் கடன் வசதி அளிப்பது போன்ற சகலவிதமான பாங்க் அலுவல்களும் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

**P. S. விஸ்வநாதன்,**

காரியதரிசி.

# சைபால்

வெட்டுக்காயம், சொரிசிறங்கு,

வேனல்கட்டி. தீப்பட்டபுண்

கரப்பான், முகப்பரு, சேத்துப்புண்,

முதலிய வியாதிகளைப்

போக்குவதில் கைகண்ட களிம்பு

---

ரமணீஸ்

# பேபிகிரைப்

குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு

சிறந்தது.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :

தி சௌத் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி

மதுரை

# கரூர் வைஸ்யா பாங்கு லிமிடெட்

(ஸ்தாபிதம் : 1916)

தலைமை ஆபீஸ் : கரூர்

ஷெட்யூல்ட் பாங்கு

பிராஞ்சுகள் :

மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், தஞ்சவூரர், கும்பகோணம், திண்டுக்கல் ஈரோடு, தாராபுரம், கோபிசெட்டிபாளையம், குளித்தலை, நாமக்கல், சத்யமங்கலம், எடப்பாடி, உடுமல்பேட்டை, கரூர் பிராஞ்சு.

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 3,00,000 |
| ரிசர்வுகள் | ரூ. | 6,30,000 |
| டிபாசிட்டுகள் சுமார் | ரூ. | 1,49,00,000 |
| மொத்த வரவு செலவுகள் சுமார் | ரூ. | 1,67,00,000 |

பிக்ஸட் டிபாசிட்டுகள் கீழ்க்கண்ட வட்டி விகிதப் படி வாங்கப்படுகிறது

| | |
|---|---|
| 6 மாத தவணைக்கு | 3% P.A. வட்டி |
| ஒரு வருஷ தவணைக்கு | 3½% P.A. வட்டி |
| 2 & 3 வருஷங்கள் தவணைக்கு | 4% P.A. வட்டி |

கரண்டு கணக்குகளுக்கு ரூ. 10000 - வரையில் 1% P.A. வட்டி தரப்படும்.

சேவிங்ஸ் கணக்குகள் : இதற்கு 2½% P.A. வட்டி (ரூபாய் ஐந்தாயிரம் வரையில்) கணக்கிடப்படும். வாரம் ரூ. 500 - வரை செக்குகள் மூலம் வாங்கிக் கொள்ளலாம்.

மற்றும் சகல பாங்கு வரவு செலவுகளும் நடத்தப்படும்.

M. லக்ஷ்மிநாராயணன் B.A., B.L.,

செக்ரட்ரி & மானேஜர்.

மலர் 12 கலைமகள் இதழ் 10

மன்மத — தை

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அங்கதன் — ந. சுப்பு ரெட்டியார் | 1 |
| 2. | இந்திய வாத்தியக் கருவிகள் | 12 |
| 3, | பேச்சு மேடை | 17 |
| 4. | சோமனதர் ஆலய வரலாறு | 29 |
| 5. | மனப் போக்கு —வி. எச். சுப்ரமண்ய சாஸ்திரி | 33 |
| 6. | செய்திக் கோவை | 43 |
| 7. | மடகாஸ்கர் —எஸ். ஸி. தியாகராஜன் | 53 |
| 8. | நந்திகொண்டா அணை | 58 |
| 9. | ஸ்ரீ நிகேதன் —பிச்சமூர்த்தி ஈசுவரமூர்த்தி | 64 |
| 10. | பிரிட்டனில் முதியவர் கல்வி | 71 |
| 11. | அஸ்ஸாம் காட்டு மிருகங்கள் | 75 |

# அங்கதன்

ந. சுப்பு ரெட்டியார்

அங்கதன் 'மந்தரப் பொருப்பால் வேலை கலக்கினான் மைந்தன்;' தாரைக்குப் பிறந்தவன். சிறுவனாக இருப்பினும் பலத்திற்கும் புத்தி கூர்மைக்கும் எடுத்துக் காட்டாகத் திகழ்பவன். இவனை பாரதத்தில் வரும் அபிமன்யுவிற்கு நிகரானவன் என்று சொல்லலாம். வாலி இவனை இராமனிடம் அடைக்கலப் பொருளாகத் தருங்கால் இவன் வீரத்தைப்பற்றி,

நெய்யடை நெடுவேல் தானை
    நீளிற நிருதர் என்னும்
துய்யிடைக் கனலி அன்ன
    தோளினன்; தொழிலும் தூயன்;

என்று கூறுகிறான். அத்துடன் தூய்மையான செயல்களையுடையவன் என்றும் குறிப்பாற் புலப்படுத்துகிறான். இராம காதையில் வரும் இவனையும் ஒரு சிறு பாத்திரமாகவே கொள்ளுதல் வேண்டும்.

வான்மீகி-கம்பன் படைப்பு: வித்தியாசம்:

கம்பன் படைத்துக் காட்டும் அங்கதனுக்கும் வான்மீகி காட்டும் அங்கதனுக்கும் சில வித்தியாசங்கள் உள. அவற்றை ஈண்டு நோக்குவோம். கிஷ்கிந்தையிலும் இலங்கையிலும் இவனைக் காண்கின்றோம். வாலி இராமன் அம்பால் வீழ்ந்த செய்தியைக் கேட்டு, தாரை

கோவென்று கதறிக் கொண்டு தன் மைந்தன் அங்கத னுடன் வாலி அடிபட்டுக்கிடந்த இடத்திற்கு ஓடி வந்த தாக வான்மீகி தெரிவிக்கிருர். கம்பனில் சுக்கிரீவனை வாலி இராமன் கையில் ஒப்படைத்த பிறகு அவன் சுக்கிரீவனை அனுப்பி அங்கதனைக் கொணர்வித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இராம பாணத்தால் அடிபட்டு மூர்ச்சை தெளிந்த பிறகு வாலி, சுக்கிரீவன் அங்கதன் ஆகியோரிடம் பேசுவதாக வான்மிகத்தில் கூறப்பட்டிருக் கிறது. அங்கதன் புலம்புவதாக வான்மீகி கூறவில்லை. கம்பனில், 'உதிரவாரிக், கடலிடைக் கிடந்த காதல் தாதையைக் கண்ணிற் கண்டு' பலவாறு சொல்லிப் புலம்பும் அங்கதனைக் காண்கின்ருேம்; தந்தையால் அவன் தேற்றப்படுவதையும் பார்க்கின்ருேம். தந்தையால் அங்கதனுக்குக் கூறப்படும் அறவுரைகளிலும் சிறிது வேறுபாடு காணப்படாமல் இல்லை. வான்மிகத்தில் வாலி 'இன்பமுறின் மகிழாமலும், துன்பமுறின் வருந்தாமலு மிருந்து சிறிய தாதை சொற்படி நடக்க வேண்டும்' என்று கூறியதாகக் கேள்வியுறுகிருேம். கம்பனில் வாலி, 'பாலமை தவிர்ந்து இராமனை வணங்கி வாழ்க' என்று உரைப்பதைப் பார்க்கிருேம். உயிர் பிரியும் தருணத்தில் வாலியால் அங்கதன் அடைக்கலப் பொருளாக ஒப்படைக் கப்படும் செய்தி வான்மிகத்தில் இல்லை; கம்பனில் அவ் வாறு செய்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

இலங்கையில் காணும் அங்கதனிடமும் சில மாறு பாடுகள் காணப்படத்தான் செய்கின்றன. வான்மீகி தூது செல்லும் அங்கதனைச் சாதாரணமாகவே காட்டு கிருர். இராமன் சொல்லியனுப்பிய செய்திகளை அப்படியே இராவணனிடம் அங்கதன் சொல்லுவதையும் அவனுக்கு ஏற்படும் ஆபத்திலிருந்து வீரத்துடன் தப்பித்து வருவ தையும் காண்கின்ருேம். கம்பன் இக்கட்டத்தைச் சிறந்த

கலைத் திறனுடனும் உயர்ந்த நாடகத் தன்மையுடனும் காட்டுகிருன். நிகழ்ச்சிகள் யாவும் நாடக பாணியில் நடைபெறுகின்றன. வள்ளுவன் கூறும் தூதனுடைய இலக்கணங்களை யெல்லாம் அங்கதனிடம் காண்கின்ருேம். சிறப்பாக,

* இறுதி பயப்பினும் அஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது.

என்ற குறளுக்கு இலக்கணமாக அங்கதன் திகழ்கிருன்.

கம்பன் காட்டும் அங்கதன் :

இனி, கம்பன் காட்டும் அங்கதனைச் சற்று விரிவாகக் காண்போம். தந்தையிடத்துப் பேரன்பு கொண்டவனுக வும், இராமனிடத்துப் பக்தி மிக்கவனுகவும், வீரத்தில் தலைசிறந்தவனுகவும், சிறந்த தூதனுகவும் இலங்குகிருன் கம்பன் காட்டும் அங்கதன். தன் சிறிய தாதையின் மூலம் தந்தை விழுந்து கிடக்கும் இடத்திற்குக் கொண்டுவரப் பெறும்போதுதான் இவனை முதன் முதலாகச் சந்திக் கின்ருேம். மண்ணுலகில் கிடக்கும் விண்மதியம் போன் றிருந்த வாலியின் மீது வானத்திலிருந்து ஒரு நட்சத் திரம் விழுவதைப் போல் விழுகின்ருன். விழுந்தவன்,

** எந்தையே எந்தை யேஇவ்
எழுதிரை வளாகத் தியார்க்கும்
சிந்தையால் செய்கை யாலோர்
தீவினை செய்தி லாதாய்

என்று சொல்லிப் புலம்பத் தொடங்குகின்ருன். வாலி யையும் கூற்றம் நோக்கி வந்ததே என்றும், வாலியின் வாலை நினைந்து அஞ்சும் இராவணன் அச்சம் தவிர்ந் தனன் என்றும், இனி தேவர்க்கு அமிர்தம் கடைந்து கொடுக்க ஒருவரும் இலரே என்றும் சொல்லி அழுகிருன்.

* குறள் - 690. ** வாலி வதை - 142.

* பஞ்சின்மேல் அடியாள் பாகன்
பாதுக மல்ல யாவும்
அஞ்சலித் தறியாச் செங்கை
ஆணையாய்! அமரர் யாரும்
எஞ்சலர் இருந்தார்; உன்னுல்
இன்னமு தீந்த நீயோ,
துஞ்சினை; வள்ளி யோர்கள்
நின்னின்யார் சொல்லற் பாலர்?

என்ற பாடலில் உணர்ச்சிச் சிகரத்தைக் காண்கின்ருேம். பொதுவாக அங்கதன் புலம்பலில் தனயன் அன்பும் வீர உணர்ச்சியும் கலந்து காணப் பெறுகின்றன. அங்கதன் வாலி சந்திப்பும் அவர்கள் பேசிய பேச்சும் கனிந்த நாடகத் தன்மையுடன் மிளிர்கின்றன.

வாலி வதத்திற்குப் பிறகு நம் அங்கதனை அதிகமாகச் சந்திக்கும் வாய்ப்பு இல்லை. சீதையைத் தேடிக்கொண்டு தெற்குத் திக்கை நோக்கி வந்தவர்களில் அங்கதனும் ஒருவன். மகேந்திர மலையில் ஒவ்வொருவரும் கடலைக் கடக்கத் தம்மாலாகாது என்று கூறும் போது, அங்கதனும் தன் வலிமையைக் குறித்துப் பேசுகிருன்.

** வேலை கடப்பன் மீள மிடுக்கின் றெனவிட்டான்
வாலி யளிக்கும் வீர வயப்போர் வசையில்லான்

என்பது தன் வலியைக் குறித்து அங்கதன் கூறுவது. இதன் பிறகு இலங்கையில்தான் இவனைச் சந்திக்கின்ருேம். இலங்கையை அடைந்த பிறகு இராமன் மீட்டும் ஒருவனை இராவணனிடம் தூதாகப் போக்க எண்ணும் போது அங்கதனுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கிறது. அங்கதன் சிறந்த வீரன் என்பது இராமன் மனத்தில் படுகிறது; அனுமனுக்குஅடுத்தபடியாக அங்கதன் இராமனிடம் மதிப்புப் பெற்றிருக்கிருன். எனவே இராமன்,

* வாலி வதை - 145 ** மயேந்திரப்பட -4.

* மாருதி பின்னும் செல்லின்
மற்றிவன் அன்றி வந்து
சாருநர் வலியோர் இல்லை
என்பது சாரும் அன்றே;
யாரினி ஏகத் தக்கார்?
அங்கதன் அமையும்; ஒன்னார்
வீரமே விளைப்ப ரேனும்
தீதின்றி மீற வல்லான்.

என்று இராமன் எண்ணுவதில் வியப்பொன்றும் இல்லை. பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எண்ணும்போது இராமன் கருதியது சரி என்பதை நாமும் அறிகிறோம். தன்னுடைய வீரத்தைக் குறித்து இராமனே திறனாய்ந் ததைக்கண்டு அங்கதனும் பேருவகை யுறுகிறான் இதனைக் கம்பன்,

** 'மாருதி அல்ல னாகில்
நீ எனும் மாற்றம் பெற்றேன்;
யாரினி என்னோ டொப்பார்'
என்பதோர் இன்பம் உற்றான்

என்று காட்டுகிறான். பின்னர் போர்க்களத்தில் இவன் பேராற்றலுடன் போர் புரியும் போதும் இளைய பெருமாள் இவன் தோளின் மீது இவர்ந்து போர் செய்யும் போதும், இவனுடைய வீரத்தையும் அடலாண்மையையும் காண் கின்றோம். இராவணனுடைய மூலபலத்தைக் கண்டு குரங்குச் சேனை பயந்தோட மூவர் மட்டிலும் பயப் படாது நின்றார்களாம்; அவர்களில் ஒருவன் அங்கதன்.

*** அரியின் வேந்தனும் அனுமனும்
அங்கத னவனும்
பிரிய கிற்றிலர் இறைவனை
நின்றனர் பின்னல்.

---

*அங்கதன் தூது - 9. ** அங். தூது - 13. ***மூலபல வதை-30.

கும்பகருணனுடனும் இந்திர சித்தனுடனும் அங்கதன் போர் செய்த நிகழ்ச்சிகள் குறிப்பிடற்குரியவை. அப்போதும் இந்திரசித்து ஏவிய நாகபாசத்தால் பலர் சோர்வடைந்தும் அங்கதன் சோர்வுறவில்லை என்பதனுலும், அவனது பேராற்றலைக் காண்கின்ருேம். அவன் போர் செய்யும் திறம் 'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?' என்று எண்ணும்படி செய்து நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

இராமனிடம் அங்கதன் மிகவும் பக்தியுள்ளவன், தன் தந்தை இறந்தபோது,

* பாலமை தவிர்நீ என்சொல்
 பற்றுதி யாயில் தன்னின்
மேலொரு பொருளும் இல்லா
 மெய்ப்பொருள் வில்லுந் தாங்கிக்
கால்தரை தோய நின்று
 கட்புலக் குற்ற தம்மா
மால்தரும் பிறவி நோய்க்கு
 மருந்தென வணங்கு மைந்த

என்றும்,

என்னுயிர்க் கிறுதி செய்தான்
 என்பதை இறையும் எண்ணுது
உன்னுயிர்க் குறுதி செய்தி ;
 இவர்க்கமர் உற்றது உண்டேல்
பொன்னுயிர்த் தொளிரும் பூணுய் !
 போதுதி ; நிலைமை நோக்கி
மன்னுயிர்க் குறுதி செய்வான்
 மலரடி சுமந்து வாழ்தி

* வாலி வதை - 148,149

என்றும் கூறியதை எப்போதும் நினைவில் வைத்து வாழ்ந்தவன். இராவணனிடம் சென்று தன்னை இராம தூதன் என்று தெரிவிப்பதில் இவனுடைய இராம பக்தியைக் காணலாம்.

* பூதநா யகன்நீர் சூழ்ந்த
புவிக்குநா யகனிப் பூமேற்
சீதைநா யகன்வே றுள்ள
தெய்வநா யகன்நீ செப்பும்
வேதநா யகன்மே னின்ற
விதிக்குநா யகன்றன் விட்ட
தூதன்யான் ; பணித்த மாற்றம்
சொல்லிய வந்தேன் என்றான்

என்ற வாக்கில் இராம பக்தியைக் காண்க. போரில் ஒரு சமயம் இராவணன், தன் தம்பி வீடணன் மீது மயன் தந்த வேலை எய்தபோது அதனை இவன் தன் மார்பில் ஏற்கத் துணிகிறான் ; அடைக்கலம் தந்த இராமன் வாக்கைக் காக்க நினைக்கின்றான்.

தூதனைப் பணியாற்றுவதிலும் இவன் திறத்தினை அறியலாம். 'யாரினி ஏகத் தக்கார் ? அங்கதன் அமையும்' என்று இராமன் தூது செல்ல அங்கதனைத் தேர்ந்தெடுத்தது சரி என்று எல்லோரும் எண்ணும்படி செய்து விடுகிறான்.

** கடன் அறிந்து காலம் கருதி இடன் அறிந்து
எண்ணி உரைப்பான் தலை

என்ற வள்ளுவன் வாக்கிற்கு இலக்காகத் திகழ்கிறான். தூய்மை, துணைமை, துணிவுடைமை ஆகிய மூன்றுடன் வாய்மையும் இவனிடம் நல்ல பண்புகளாக அமைந்திருந்தன. தன்னை இராம தூதன் என்று உணர்த்துவதில்

---

* அங்கதன் தூது - 21. ** குறள் - 687.

தூய்மையும், தன்னை வாலி மைந்தன் என்று கூறுவதில் துணிவுடைமையும் வெளிப்படுகின்றன. இராவணன் முன்பு போய் நின்ற அங்கதனை அவன் ‘நெருப் பெழ நிமிரப் பார்த்து, இன்று இவண் வந்த நீ யார்? எய்திய கருமம் ஏது? கொன்று இவர் தின்னு முன்னம் கூறுதி தெரிய’ என்று கேட்கிறான். அதற்கு அங்கதன் உரைக்கும் மாற்றம் இது:

* இந்திரன் செம்மல் பண்டோர்
 இராவணன் என்பான் தன்னைச்
சுந்தரத் தோள்க ளோடும்
 வாலிடைத் தூங்கச் சுற்றிச்
சிந்துரக் கிரிகள் தாவித்
 திரிந்தவன் தேவர் உண்ண
மந்தரப் பொருப்பால் வேலை
 கலக்கினன் மைந்தன் என்றான்.

இவ்வாறு இராவணன் முன்பு சிறுவனான அங்கதன் சொல்லுவதற்கு எவ்வளவு அஞ்சா நெஞ்சம் வேண்டும்! அது மட்டுமா! தன்னை மைந்தனாகப் பாவித்து ‘தாதையைக் கொன்றான் பின்னே தலை சுமந்து இருகை நாற்றி, வாழ்வது பேதையர் வாழ்வு என்றும், வானர அரசை அவனுக்குத் தந்து தானே முடிசூட்டி வைப்பதாகவும் பிரிக்கும் சூழ்ச்சியால் இராவணன் கூறியபோது இவன் கைகொட்டி இலங்கையே அதிரும்படி சிரித்து,

‘இங்குநின் றூர்கட் கெல்லாம்
 இறுதியே என்ப துன்னி
உங்கள்பா லின்றும் எம்பாற்
 போந்தனன் உம்பி

என்றும்,

---

* அங்கதன் தூது - 24.

வாய்தரத் தக்க சொல்லி
　　என்னையுன் வசஞ்செய் வாயேல்
ஆய்தரத் தக்க தன்றே
　　தூதுவந் தரச தாள்கை !
நீதரக் கொள்வேன் யானே
　　இதற்கினி நிகர்வே றெண்ணில்
நாய்தரக் கொள்ளும் சீயம்
　　நல்லரசு

என்று கூறுகிருன். போர்க்களத்தில் கும்பகருணன் இவனை நெருப் பெழ நிமிர நோக்கி,

* பொன்றவந் தடைந்த தானைப்
　　புரவலன் ஒருவன் தானே ?
அன்று அவன் மகனே? எம்மூர்
　　அனல்ம டுத்து அரக்கர் தம்மை
வென்றவன் தானே ? யாரோ?
　　விளம்புதி விரைவின்

என்று கேட்கிருன். அவன் உருவத்தையும் கோபக் கனல் வீசும் முகத்தையும் கண்டு சிறிதும் அஞ்சாது அங்கதன் உரைக்கும் பதில் இது :

* நும்முனை வாலிற் சுற்றி
　　நோன்றிசை நான்குந் தாவி
மும்முனை நெடுவேல் அண்ணல்
　　முளரியஞ் சரணம் தாழ்ந்த
வெம்முனை வீரன் மைந்தன்
　　நின்னைஎன் வாலின் வீக்கித்
தெம்முனை இராமன் பாதம்
　　வணங்கிடச் செல்வன் என்ருன்.

---

*கும்பகருணன் வதை - 191, 192.

இவற்றில் துணிவும் தூய்மையும் வாய்மையும் கலந்து திகழ்வது எண்ணி உணர்தற்குரியது. இதன் பிறகும் தன் உயிர்க்கு இறுதி பயப்பதாக இருப்பினும் இராமன் கூறியதை அப்படியே உரைப்பதில் இவன் கலங்கா நெஞ்சுடையவன் என்பது புலனுகின்றது. இந்தக் கட்டத்தில் அங்கதன் வாய் மொழியாக வரும் ஆறு பாடல்களும் பன்முறை படித்து மகிழ்வதற் குரியவை.

**அங்கதன் : சிறு பாத்திரம்**

'அங்கதன் என்ற பாத்திரமே இல்லாது கவிஞன் கதையை இயக்கி யிருக்கலாமே; அவனை ஏன் படைக்க வேண்டும்?' என்பதை ஒரு சிறிது ஆராய்வோம். அங்க தன் வாலியின் படைப்பிலிருந்து கிளைத்த ஒரு சிறு பாத் திரம். இராமனுடைய அருங்குணங்களையும் பேராற்றலை யும் படை பலத்தையும் இராவணனுக்கு மீண்டும் மீண் டும் உணர்த்துவதற்குப் பலர் வேண்டும். இவற்றை அங்கதனும் நிறைவேற்றுகிருன். இலங்கையை எய்திய பிறகும் இராவணன் சமாதானத்துக்கு வருவானு என்று எண்ணிப் பார்க்கும் இராமனது கருணை உள்ளத்தை வெளிப்படுத்தவும், இராவணனுக்கு 'சிம்ம சொப்பனமாக' இருந்த வாலி இறந்த செய்தியைத் தெரிவித்தாவது இராமனது பேராற்றலை எதிரி அறியச் செய்யவும், அனுமனைப் போன்ற எண்ணற்ற வீரர்கள் இன்னும் இராமனிடம் உளர் என்பதைப் பெற வைக்க வும் அங்கதன் உதவுகிருன். கதையின் நீட்டத்திற்கு அதிகம் துணை புரியாவிடினும், கதையின் இறுதி வரை யிலும் இப்பாத்திரம் உயிருடன் வாழ்கிறது; 'அங்கதன் உடைவாள் ஏந்த' இராமன் முடிசூட்டிக் கொள்கிருன்.

ஆனல் நாடகப் பண்புடன்கதையை நடத்தக் கம்பன் இப் பாத்திரத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளுகிருன். அங் கதன் தூது சென்றபோது நடைபெற்ற நிகழ்ச்சிகளால் இதனை நன்கு அறியலாம். இராவணன் அங்கதன் பேச் சுக்கள் நாடகபாணியில் சித்திரிக்கப் பெற்றிருக்கின்றன

# இந்திய வாத்தியக் கருவிகள்

இந்தியாவில் சங்கீதம் தெய்வீகக் கலையாகவே பாவிக்கப்பட்டு வந்திருக்கிறது. பிரம்மா தான் சங்கீதத்தை சிருஷ்டித்ததாகக் கூறப்படுகிறது. கடவுளரும் தேவியரும் சங்கீதத்துடனும் நடனத்துடனும் தொடர்பு கொண்டவர்களாகவே கருதப்பட்டும் வந்திருக்கிருர்கள். குறிப்பிட்ட சில கடவுளர்கள் குறிப்பிட்ட சில வாத்தியங்களின் கர்த்தாக்களாகவோ அதிபர்களாகவோ குறிப்பிடப் பட்டிருக்கிருர்கள்.

நடராஜர் நடனத்துக்கும் சங்கீதத்துக்கும் அதிபராகக் கருதப்படுகிருர். சிவனுடைய பல பெயர்கள் சங்கீதத்துடன் தொடர்புள்ளவையாக இருக்கின்றன. ருத்ரன் வாசித்த வீணைக்கு "ருத்ர வீணை" என்று பெயர். அவர் கையிலுள்ள உடுக்கை "டமரு" என்று குறிப்பிடப்படுகிறது. நாதத்துக்கெல்லாம் ஆதாரமான ஆகாச தத்துவத்தை அது குறிப்பிடுவதாகச் சொல்லப் படுகிறது. விஷ்ணுவுக்கும் புல்லாங்குழலுக்கும் உள்ள தொடர்பும் குறிப்பிடப்படுகிறது. கிருஷ்ணனின் குழலோசைக்கு ஏற்றபடி கோபியர்–இயற்கைத் தத்துவங்களின் சக்திகள்—நடனமாடினர். சரஸ்வதி சதா வீணையும் கையுமாக இருப்பதுடன் சகல கலைகளுக்கும் இறைவியாகவும் கருதப்படுகிருள்.

இந்திர லோகத்தில் சங்கீதத்துக்கு அதிதேவதைகளான கந்தருவரும், கின்னரரும், வித்தியாதரரும், நாரதர், தும்புரு, விஸ்வாவசு முதலிய முனிவர்களும்

இருந்ததாகக் கூறப்படுகிறது. சங்கீதத் துறைகளைப் பற்றிக் கூறும் முதல் நூல்கள் எல்லாம் அனேகமாக அவர்களின் பெயராலேயே வழங்கி வருகின்றன.

இந்தியாவின் நீண்டகாலச் சரித்திரத்தில் எத்தனையோ வகை வகையான வாத்தியக் கருவிகள் உபயோகத்திலிருந்து வந்திருப்பதாகத் தெரியவருகிறது. வெகு சாமானியமான கருவிகள் முதல் மிகவும் நுட்பம் வாய்ந்த கருவிகள் வரையில் 600-க்கு மேற்பட்ட வாத்தியங்கள் உபயோகத்திலிருந்திருக்கின்றன. ஒவ்வொன்றும் தனித்தனிப் பெயர், உருவம், அமைப்பு, உபயோக முறை, நாத வேறுபாடு முதலியவை உள்ளவையாக இருக்கின்றன.

தோல் கருவிகளும், தொளைக் கருவிகளும், நரம்புக் கருவிகளும் ஆகிய அவை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக உபயோகித்துத் தேர்ந்தவையாக உள்ளன. கால வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் மறைந்துவிட்ட பல இசைக்கருவிகள் பற்றியும் நாம் தெரிந்திருக்கிறோம். ஆதி காலத்திலிருந்தே அதே ரூபத்தில் மாறுமலும் அழியாமலும் இருந்துவருகிற கருவிகளும் இருக்கின்றன.

**புராதன கருவிகள்**

பழந்தமிழ் நூல்கள் பேரியாழ், சகோட யாழ் என்று எத்தனையோ வகையான யாழ் வகைகளை விவரிக்கின்றன. அம்புஜா, ஆலாபினி, பரிவர்த்தனி, விபரஞ்சி, சித்தரா, கச்சபி, மத்தகோசிபா முதலிய பழைய தந்திக் கருவிகள் இப்போதில்லை. வீணை, சித்தார், கோட்டு வாத்தியம், விசித்திர வீணை, சரோட், சாரங்கி, எஸ்ராஜ் முதலிய தந்திக் கருவிகள் தான் இப்போது வழக்கிலிருக்கின்றன. வயலின் அல்லது பிடில் மேனுட்டு வாத்தியம். இப்போது மிருதங்கம், தபேலா, கஞ்சிரா, முதலியவை பிரதான

தோல் கருவிகளாக, தாளக் கருவிகளாக இருக்கின்றன. தவுல் தென்னாட்டின் விசேஷ துணைக் கருவியாக விளங்கு கிறது. முன் காலத்தில் உடுக்கை, இடக்கை, முழவு, திமிலை, பறை, துடி, தண்ணுமை, மத்தளம் முதலிய எத்தனையோ தோல் கருவிகள் இருந்ததாகத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. பதஹா, முராஜா, பேரி, துந்துபி முதலிய தோல் கருவிகள் இந்தியாவில் இருந்த தாக அறிகிறோம்.

இவைகளின் உருவம், அமைப்பு, பெயர் முதலியவை களைத் தெரிந்து கொள்வதற்குப் பண்டைய இலக்கியங் களையும், சிற்பங்களையும், சித்திரங்களையும் தான் ஆராய வேண்டும். வேதங்கள், உபநிஷதங்கள், புராண இதிகாசங்கள் முதலியவைகளில் அவை பற்றிய குறிப்புக் களைக் காணலாம். பரதரின் நாட்டிய சாஸ்திரம், சாரங்க தேவரின் சங்கீத ரத்னுகரம். முதலிய நூல்களில் அவை களின் விவரங்களைக் காணலாம். காளிதாசரின் காவியங்கள், நாடகங்கள், முதலியவைகளிலும் தமிழில் சிலப்பதிகாரத்திலும் தெலுங்கில் பால்குருகி சோமநாதர் இயற்றிய நூல்களிலும் இசைக் கருவிகளின் வர்ணனை கள் இருக்கின்றன. மொகலாய மன்னர் காலத்திலிருந்த வாத்தியக் கருவிகள் பற்றி அபுல் பசலின் "அய்னி அக்பரி" என்னும் நூலில் குறிப்பிடப்படுகிறது.

புராதன நூல்களிலும் சிலப்பதிகாரத்திலும் இசைக் கருவிகளின் வர்ணனைகள் வெகு நுட்பமாக அமைந் துள்ளன. அதோடுகூட அவைகளை இசைப்பவர்களின் இருக்கை முறை, அவைகளைக் கையாளும் விதம் முதலிய எல்லாம் நமக்கு ஆச்சரியமூட்டும் முறையில் வெகு துல்லியமாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. சிதம்பரம், மதுரை முதலிய தென்னிந்தியக் கோயில்களிலும், நாகார்ஜுனகொண்டா, சாஞ்சி, அமராவதி, காந்தாரா,

மதுரா, பாக், பார்ஹத் முதலிய இடங்களிலும் வீணை, யாழ், குழல், மத்தளம், தாளம், மணி முதலியவைகளின் உருவங்களைச் சிற்பங்களிலும் சித்திரங்களிலும் காணலாம். தஞ்சாவூர், அஜந்தா, பாக் ஆகிய இடங்களிலுள்ள சுவர்ச் சித்திரங்களில் அவைகளை விசேஷமாகக் காணலாம்.

**கல்கத்தாக் காட்சிசாலை**

இந்திய வாத்தியக் கருவிகளின் தொகுப்பை கல்கத்தாவிலுள்ள பொருட்காட்சிசாலையில் காணலாம்.

வாய்ப்பாட்டுத்தான் இந்தியாவில் விசேஷமாக இருப்பினும், வாத்தியங்களுக்கும் விசேஷ முக்கியத்துவம் இருக்கிறது. பக்க வாத்தியங்களாக அமைந்துள்ள கருவிகள் விஷயத்திலுங்கூட, அவைகளைத் தனி ஆவர்த்தனம் செய்து காட்டுவதற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுத்தான் வருகிறது. சில கருவிகள் விஷயத்தில் தனிக் கச்சேரிகள் கூட நடத்தப்படுகின்றன.

இந்திய சங்கீதம் இன்னிசை சங்கீதமாக, ராக இசையாக அமைந்துள்ளபடியால் "ஆர்க்கெஸ்ட்ரா" பாணியில் ஒரே கூட்டமாக அவைகளைச் சேர்த்து வாசிக்கும் முறை அபிவிருத்தியடையவில்லை. ஆனால், சில கருவிகள் சேர்த்தே வாசிக்கப்படுகின்றன. ஊர்வலங்கள் விழாக்கள், பவனிகள் முதலியவைகளில் மேளங்கள் வாசிக்கப்படுகின்றன. புத்தருக்கு "சப்த பூஜை" செய்யப்படும்போது வீணையும் சிறிய மத்தளங்களும், புல்லாங்குழலும், இரட்டை மத்தளமும் ஜாலராவும் சேர்த்து இசைக்கப்படுகின்றன. அசோகர் வெளியே போகும்போதெல்லாம் வாத்திய கோஷ்டி ஒன்று கூடவே சென்றதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

குப்தர் காலத்தில் நாடக அரங்கிலும் போர் அரங்கிலும் வீணை, குழல், மிருதங்கம், புஷ்கரம், முரஜா, துரியா, சங்கம், துந்துபி, கண்டா முதலியவை உபயோகிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது.

யுவான் சுவாங் முதலிய வெளிநாட்டு யாத்ரீகர்கள் 7-ம் நூற்றுண்டில் உபயோகத்திலிருந்த இசைக் கருவிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். பாணு தம் காவியத்தில் சங்க துந்துபி, முரஜா, வேணு, வீணை, ஜில்லரிகா, தாளா, கஹாலே முதலியவற்றைக் குறிப்பிட்டிருக்கிருர். மன்னர் (ஹர்ஷர்) குளிக்கச் செல்லும் பொழுது சிரிங்கா, வீணை, பேரிகை, ஜாலரா போன்றவை முழங்கும் என்றும் கூறியிருக்கிருர்.

மொகலாயர் காலத்தில் "நவ்பத்" என்று குறிப்பிடப்படுகிற ஒன்பது வகை வாத்தியக்காரர்கள் இருந்த தாகத் தெரியவருகிறது. அவர்கள் கோபுர மேடைகளில் இருந்து வாத்தியம் வாசித்தார்கள். அக்பர் காலத்தில் இருந்த "நாக்கர் காணுவில்" குர்கா, நக்காரா, டோல், சுர்ணய், நபீரி, கர்ணு, சிரிங்கா ஜானி முதலியவை இருந்தன.

தற்காலத்தில் உதய சங்கர் அல்மோராவில் உள்ள தம் நடன நிலையத்தில் "ஆர்க்கெஸ்ட்ரா" வாத்திய கோஷ்டியை ஏற்படுத்தியிருக்கிருர். அகில இந்திய ரேடியோவும் ஆர்க்கெஸ்ட்ரா கோஷ்டி அமைப்பை உருவாக்கி வருகிறது. டி. கே. ஜெயராம ஐயர், ரவி சங்கர் ஆகியோர் நடத்தி வருகிற "வாத்திய விருந்தா" ரேடியோ ரசிகர்களுக்கு நன்கு தெரிந்தவைதான். சிலர் அவைகளை வெகுவாக ரசித்துவருகிருர்கள்.

இப்புதிய ஏற்பாடு நன்கு ஸ்தாபிதமாவதற்கு, இன்னும் நன்ருய் ஆராய்ச்சிகள் நடத்தவேண்டும்.

# பேச்சு மேடை

## கதா காலட்சேபம்

எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கும் குழந்தைகளுக்கும் கூடப் புரியும்படி வித்துவான்கள் காலட்சேபம் செய்தால்தான் அதன் உண்மையான நோக்கம் நிறைவேறும்.

கதா காலட்சேபக் கலையைப் பாதுகாக்க, திருப்திகரமான நடவடிக்கை எடுக்காவிட்டால், இக் கலை படிப்படியாகத் தாழ்ந்து, தற்போதையத் தலைமுறையுடன் மறைந்து விடவும் கூடும்.

கடவுள் உண்டு என்பதைப் போன்ற சாதாரண உண்மைகளைப் பகிரங்கமாகக் கூறுவதற்குக்கூட இக் காலத்தில் அதிக தைரியம் வேண்டியிருக்கிறது.

கடவுளிடம் நம்பிக்கை இல்லை யென்று இப்பொழுதெல்லாம் சிலர் கூறுகின்றனர். அவர்கள் இப்படிச் சொல்லுவதன் உண்மையான காரணம் என்ன தெரியுமா? கடவுளிடம் நம்பிகை வைத்தால், உண்மை பேசவேண்டும், நியாயமாக நடக்கவேண்டும், பிறருக்கு நன்மைசெய்யவேண்டும் என்பனபோன்ற நிர்ப்பந்தங்கள் ஏற்படும். இவைகளைச் செய்வது அவர்களுக்குக் கஷ்டமாகத் தோன்றுகிறது. ஆகவே கடவுள் இல்லை என்று கூறும் சுலபமான வழியை அவர்கள் கடைப் பிடிக்கின்றனர். வழியை மறைத்திருக்கும் கெட்ட எண்ணங்களையும் கொடிய ஆசைகளையும் போக்குவதுதான் அவர்களை

மீட்பதற்குச் சிறந்த வழி. எளிய முறையில் நடத்தப் பெறும் கதா காலட்சேபங்கள் மூலம் இதைச் செய்ய முடியும்.

—ராஜாஜி

நாகசுரம்

நாகசுரம் சிறந்ததொரு இன்னிசைக் கருவி. வெளி நாட்டு நாகரிகங்களாலும், உள் நாட்டு அரசியல் குழப்பங் களாலும் பண்டைய நம் நாட்டு இசை சிதைவுருத வாறு பாதுகாத்த பெருமை இந்த நாகசுரத்துக்கே உரியது என்று கூறினுல் அது மிகையாகாது. ராகத்தை எவ்வளவு நேரம் வேண்டுமானுலும் விரிவாகவும் விளக்கமாகவும் வாசித்து எல்லோரையும் பரவசப்படுத்தும் இயல்பு இந்த நாகசுரத்துக்கு அமைந்திருப்பது போல் வேறு எந்த இசைக் கருவிக்கும் அமையவில்லை. இது உத்தம இசைக்கருவிகளுள் சிறந்ததாக இருப்பது பற்றியே தேவாலயங்களில் இன்றியமையாததோர் அங்கமாக நம் முன்னேயோர் இக் கருவியை உபயோகித்து வந்துள் ளனர். மற்றையக் கலைகளுக்கும் இசைக் கருவிகளுக்கும் இடம் தந்த பல்கலைக் கழகங்கள் கூட இவ் விசைக் கருவிக்கு இடந்தராதிருப்பது ஒரு குறையாகவே தோன்றுகிறது. இக் குறை நீங்குமாறு கல்வி நிலையங் கள் தக்க மாணவர்களைத் தேர்ந்தெடுத்து இவ் விசைக் கருவிப் பயிற்சி தருவது மிக மிக நல்லதாகும்.

—ஸ்ரீ தண்டபாணி தேசிகர்

பிடில் வாசிப்பு முறை

பிடில் வித்துவான்களில் சீர்காழி ஸ்ரீ நாராயணசாமிப் பிள்ளை, திருக்கோடிக்காவல் ஸ்ரீ கிருஷ்ணசாமி ஐயர், திருச்சி ஸ்ரீ கோவிந்தசாமிப் பிள்ளை முதலியோர் குறிப் பிடத் தக்கவர்கள்.

இவர்களை யெல்லாம் நினைக்கும் பொழுது விசேஷ சம்பிரதாயங்கள் நிறைந்த அத்தகைய சங்கீதத்தை இனி எப்போது கேட்போம் என்று மனத்தில் ஏக்கம் உண்டாகிறது.

பிடில் வாசிப்பதைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

முதலில் பாட்டு அப்பியாசம் செய்து, ஸ்வரஞானம் வந்த பிறகு பிடிலில் பழகவேண்டும். அப்பொழுதுதான் முன்பு மனத்தில் பதிந்த பாட்டு ஞானமும், நிறைவான ஸ்வர ஞானமும் சேர்ந்து நல்ல ஸ்வரமாய் அமையும். பிடிலுக்கு வில்தான் முக்கியம். பாட்டைப் போல பிடில் வாத்தியத்தை வாசிக்கவேண்டுமென்பது நமது பெரியோர்களுடைய முறை. பாடி,ஸ்வர ஞானமும் வந்த பிறகு பிடில் அப்பியாசம் செய்தால், எந்தக் கீர்த்தனையைப் பிடிலில் வாசிக்கிறார்களோ அந்தக் கீர்த்தனையின் சாகித்தியத்தைக் கேட்பது போல் இருக்கும். ஒரு தந்தியில் ஒரு வர்ணத்தை மூன்று காலம் கமகத்தோடு வாசிக்க வேண்டும். அதன் பின், அவர்களே மனோ தர்மம் செய்து கொள்ள வசதி உண்டாகும். தனியாக வாசிப்பதைக் காட்டிலும், பக்க வாத்தியமாக வாசிப்பது சிரமமாக இருக்கலாம். பாட்டுப் பாடும் முறை பழக்கத்தில் இருந்தால், பாடுபவர்களைச் சுலபமாகத் தொடர்ந்து பின் பற்றலாம். அன்றியும், பிடில் வாசிப்பவர்கள் தாங்கள் பக்க வாத்தியக்காரர்கள் என்ற நினைவோடு பாட்டுக்கு அநுசரணையாக வாசிக்க வேண்டும்.

—மருங்காபுரி ஸ்ரீ கோபால கிருஷ்ணய்யர்

### தேசீய மொழி

இதர மொழிகளை விட இந்தி மொழியில் அதிக இலக்கிய வளம் இருக்கிறது என்பதற்காக அதனைத் தேசீய

மொழியாக்கவில்லை; அதிகமான மக்களுக்கு அது தெரிந்திருக்கிறது என்பதனுல்தான் அதனைத் தேசீய மொழியாகக் கொள்கிரேும். இந்தியை ஆதரிப்பவர்கள் மற்றவர்களின் உணர்ச்சியைப் புண்படுத்தாமல் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும். விருப்பமில்லாதவர்கள் மீது அதைத் திணிக்கக் கூடாது. நிதானமாக அடக்கத்துடன் வேலை செய்ய வேண்டும்.

இந்தியர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று பலர் சொல்லுகிருர்கள். ஆனுல் நாட்டில் இவ்வளவு லிபிகள் இருக்கும் வரையில் இது கனவாகத்தான் இருக்கும். ஒரு பொதுலிபியை மேற்கொண்டால் இதர மொழிகளைச் சுலபமாகக் கற்கலாம்.

வட இந்தியர்களாகிய நாம், ஒரு தென்னிந்திய மொழியை முக்கியமாய்த் தமிழைக் கற்கவேண்டும். மற்ற மொழிகளிலுள்ள உயர்தர இலக்கியங்களை மொழிபெயர்ப்பதும் அவசியம்.

—ஆசார்யா நரேந்திர தேவ்

நமது பரம்பரை

காரியங்களை—அரும் பெரும் காரியங்களையும் அமைதியாகச் செய்யும் ஒரு பரம்பரைப் பண்பை நாம் வளர்த்துக் கொண்டு வந்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. நாம் மற்ற நாட்டினரை விட அறிவிலோ அல்லது மற்ற வழிகளிலோ உயர்ந்தவர்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனுல் இந்தியப் பரம்பரையில் ஏதோ ஒரு தனிப் பண்பு இருக்கிறது என்றுதான் கூறுகிறேன். அதனுல்தான் அமைதியாக மாறுதல்களை ஏற்படுத்துவது நமக்குச் சுலபமாய் இருக்கிறது.

மற்ற நாடுகளுக்கு இந்தியா விடுக்கும் செய்தி ஒன்று இருக்குமானுல் அது அமைதியான முறைகளின் மூலம்

காரியங்களைச் செய்வதும், பிரச்னைகள் எவ்வளவு பெரிதாய் இருந்தாலும் அவற்றை அமைதியான முறையில் தீர்ப்பதும் தான்.

— ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு

சமய ஒற்றுமை

உலகத்திலுள்ள பல்வேறு சமயங்களும் ஒன்று கலந்து, ஆத்மிக வாழ்வை வளர்த்து, அறநெறி ஓங்க அடிகோல வேண்டும்.

சமயப்பற்றின்மையையும், தெய்வ அவநம்பிக்கையையும் ஒழிக்க வேண்டுமானால் உலகத்திலுள்ள பல்வேறு சமயங்களும் தங்கள் எதிர்ப்புக்களைக் கைவிட்டு ஒன்ருக உழைக்க வேண்டும்.

சத்தியத்தின் சத்துருக்கள் பிடிவாதக் கருத்துள்ள வெறியர்கள்.

'சமயம்தான் மனிதனின் நம்பிக்கை. புது உலகத்தைப் போற்றி வளர்ப்பது சமயமே' என்பவைதான் உலகப் பெருஞ் சமயங்களின் கருத்துக்கள்.

யூத, கிறிஸ்துவ, இஸ்லாம் சமயங்கள் சேர்ந்து மேற்கு நாடுகளின் அனுபவத்தை வளப்படுத்தின. அதைப் போலவே இந்து, பௌத்த, கன்பூஷியஸ் சமயங்கள் கிழக்கு நாடுகளின் அனுபவத்துக்கு உரம் அளித்தன. உலகில் உள்ள பல்வேறு சமயங்கள் ஒன்றுடன் ஒன்று கலந்தால்தான் ஆத்மிக வாழ்வு மலரும்—உலக தார்மிக நெறி ஏற்படும்.

'வாழ்வின் ரகசியத்தை அறிவிக்கும் திறவு கோல் சமயம்தான் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுவிட்டது. எங்களிடம்தான் இந்தத் திறவுக் கோல் இருக்கிறது என்று இந்திய சமயங்கள் கூறவில்லை. ரகசியத்தை

அறிய வேறு வழிகள் இருப்பதை இந்திய சமயங்கள் அனுமதிக்கத் தயாராக இருக்கின்றன" என்று பிரபல சரித்திரப் பேராசிரியர் ஸ்ரீ ஆர்னல்டு டோன்பி கூறியிருக்கிறார்.

சமயங்களின் அடிப்படையில் உலகம் ஐக்கியமாக வேண்டுமானால், இந்த சமயம் அல்லது அந்த சமயம் என்ற அடிப்படையில் அது ஐக்கியமாகாது. உலகத்திலுள்ள பல்வேறு சமயங்களின் ஒத்துழைப்பின் அடிப்படையில் தான் உலகம் ஐக்கியமாகும். என் சமயம் தான் உயர்ந்தது என்ற எண்ணம் ஏற்படுவது இயற்கை. ஆனால் மற்ற சமயங்களை அறிந்து கொள்வதை இந்த எண்ணம் தடை செய்யக்கூடாது.

பரம்பொருளுடன் ஒன்று கலப்பதும், மனிதனின் தெய்விக அம்சங்களும்தான் இந்து சமயநெறியின் இரண்டு முக்கிய அம்சங்கள்.

எல்லோரும் சுதந்திர உணர்ச்சியுடன் நட்பாக வாழ வேண்டும்; அல்லது பீதி, அவநம்பிக்கை, பொருமை நிறைந்த கீழ்நிலையில் அவதிப்பட வேண்டும்—இதைத் தவிர மனித குலத்துக்கு வேறு வழி கிடையாது.

ஆத்மிக, உண்மைத் தத்துவ உலகைக் காண வேண்டுமானல், புறக்கண்களை மூடி அகக் கண்களைத் திறந்து மௌனமாக ஆண்டவனைத் துதிப்பதே வழி.

அன்பின் மூலம்தான் உண்மையான சமய வாழ்வு மலர வேண்டும்.

ஸ்ரீ எஸ். ராதாகிருஷ்ணன்

கண்டெடுத்த பொருள்

வார்தாவில் ஒரு சமயம் நண்பர் ஒருவருடன் உலாவிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அந்த நண்பர்

பாதையில் ஒரு தங்க நகையைக் கண்டெடுத்தார். அதை என்ன செய்வது என்று என்னிடம் கேட்டார். "எடுத்த இடத்திலேயே அதைப் போட்டு விடுங்கள்; அல்லது ஒரு நல்ல பிரஜை என்ற முறையில் (அப்பொழுது ஆங்கிலேயர் ஆட்சி எனினும்) அந்த நகையை உரிய அதிகாரிகளிடம் சேர்ப்பித்து விடுங்கள்" என்று பதிலளித்தேன். ஒரு சாதாரண கல்லை எப்படி எறிந்து விடுவோமோ, அப்படியே நகையையும் எறிந்துவிட வேண்டுமென்பது தான் எனது கருத்து.

—ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண்

வங்க இலக்கிய மகாநாடு

நாடெங்கும் நடைபெறும் மற்ற மகாநாடுகளிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டதாகும். இந்த மகாநாட்டின் முதல் தலைவர் ஸ்ரீ ரவீந்திரநாத் தாகுர் முதல், இதை நடத்திவரும் பெரியோர்கள் அனைவரும் நாட்டின் கலா சாரத்தில் உள்ள அடிப்படை ஒற்றுமையை உணர்ந்து வந்திருக்கின்றனர். இந்திய இலக்கியம், கலை, சங்கீதம் முதலியவற்றைப் பிரதேசவாரியாகவோ, மொழிவாரியாகவோ பிரித்து வாழ முடியாது என்பதை இவர்கள் அறிந்துள்ளனர். இதனால்தான் இந்த மகாநாடு நடைபெறும் இடங்களில், அந்தந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த உப மகாநாடுகளும் நடத்தப் பெறுகின்றன. சென்னையில் நடைபெறும் வங்க இலக்கிய மகாநாட்டை யொட்டி தமிழ், தெலுங்கு, மகாநாடுகளும் நடப்பது இயற்கையே. இது சம்பந்தமாக தென் இந்தியக் கலைப் பொருட்காட்சி ஏற்பாடு செய்திருப்பதும் நல்லதே.

மனிதன் கலைகளின் மூலம்தான் உன்னத நிலையை அடைய முடியும். கலைகளில் லலித கலைகள் என்றும், சாதாரணக் கலைகள் என்றும் போலி வேற்றுமைகளைக்

கற்பிக்கிருர்கள். தையல் வேலையைக்கூட அறுபத்து நான்கு கலைகளில் ஒன்ருக வாத்ஸ்யாயனர் சேர்த்திருக்கிருர். அழகான பானைகளோ, தட்டுக்களோ செய்ய முடியாத ஒரு நாட்டினரால் அழகான கோபுரங்கள் கட்டவும் முடியாது.

ஸ்ரீ பி. வி. ராஜமன்னர்.

கூட்டுப்பண்ணை

பூதானத்துக்கு நிலமனைத்தையும் அளித்துவிட்ட கிராமதான கிராமங்களில் கூட்டுப்பண்ணை கூடாது. கூட்டுப்பண்ணையின் கீழ் விவசாயிகள் வெறும் உழைப்பாளர்களாகி விடுவார்கள். இதனல் ஒரு புதிய யதேச்சாதிகார முறை உண்டாகும்; கிராம ஜனநாயகத்துக்கே இது ஆபத்து.

கூட்டுப்பண்ணை நாணயமாக நடத்தப்பட்டாலுங் கூட, அதிகாரம் மத்தியதர வகுப்பினரிடம் குவிந்துவிடும். இதனல் விவசாயிகளுக்குக் கூட்டுப்பண்ணையில் உண்மையான அக்கறை இல்லாமல் போய்விடும்.

கிராமத்தில் உள்ள எல்லா நிலத்துக்கும் கூட்டு உரிமை இருக்க வேண்டும். கிராமச் சபையில் ஒவ்வொரு குடும்பத்துக்கும், அவரவர் வசதி, தேவைக்குத் தக்கபடி நிலங்களை ஒதுக்க வேண்டும்.

ருஷ்யாவில் கூட்டுப்பண்ணைகள் சர்வாதிகாரத்துக்கும் சுரண்டலுக்கும் இருப்பிடமாய் விட்டன. தங்கள் கருத்துக்களைச் சுதந்திரமாகத் தெரிவிக்க விவசாயிகளுக்குச் சந்தர்ப்பமளிக்கப் பெற்ருல், கூட்டுப்பண்ணைகளைக் கலைத்துவிட வேண்டுமென்றே பெரும்பாலானவர்கள் வாக்களிப்பார்கள் என்று நம்புகிறேன்.

—ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண்

இந்திய சமுதாயம்

பசியால் வாடுபவர்களுக்கு உணவும், ஆடையின்றி இருப்பவர்களுக்குத் துணியும், நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு வைத்திய உதவியும் அளிக்க வேண்டும். எல்லா மக்களின் உணர்ச்சியையும் நல்ல முறையில் பக்குவப் படுத்த வேண்டும். இப்பணியில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். எவரிடமும் நமக்கு விருப்பு-வெறுப்புக் கிடையாது. நாம் நம்மையே நம்பியிருக்க வேண்டும்; என்றாலும் பிறநாட்டு மக்களிடமிருந்தும் கற்றுக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

ஒரு சிலர் செல்வத்தில் புரளுகின்றனர்; மற்றவர் வாழ்க்கையில் வாடுகின்றனர். இக்குறைபாடுகளை அகற்ற நாம் முயல வேண்டும். சம்பந்தப்பட்ட தொழில்களின் நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்கு மேலும் அதிக அளவில் பங்களித்து, தோழமை உணர்ச்சியை வளர்க்க வேண்டும். நிர்வாகிகள்-தொழிலாளிகள் ஆகிய இரு தரப்பினரும் தேசத்தின் செல்வத்தைப் பெருக்குவதையே பொது லட்சியமாகக் கொள்ள வேண்டும். அத்தகைய உணர்ச்சி வளரும் பட்சத்தில், நமது சமூகத்தில் காணப்படும் குறைபாடுகள் சீக்கிரத்தில் ஒழிந்து விடும். மனித உறவையும், வாழ்க்கையின் உன்னத நோக்கங்களையும் நாம் வளர்க்க வேண்டும்.

—ஸ்ரீ எஸ். ராதாகிருஷ்ணன்

அபேட்சகர்கள்

பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அபேட்சகர்களைப் பொறுக்கி எடுப்பது பற்றி மக்கள் ஏற்கனவே சிந்திக்க ஆரம்பித்து விட்டார்கள். அபேட்சகர்களைப் பொறுக்கி எடுப்பதில் அவசரமாக எதையும் செய்யக் கூடாது.

தற்பொழுதுள்ள சிறந்த அபேட்சகரையே மீண்டும் பொறுக்கி எடுக்க வேண்டும். ஒருவர் அங்கத்தினராக இருக்கிறார் என்பதற்காக மீண்டும் அவரையே பொறுக்கி எடுக்க வேண்டுவதில்லே. சேவையை அடிப்படையாகக் கொண்டுதான் ஒவ்வொருவரையும் பொறுக்கி எடுக்க வேண்டும்.

அபேட்சகர்களேப் பொறுக்குவதில், ஜாதி, வகுப்பு அல்லது மத வேற்றுமைகள் குறுக்கிடக் கூடாது. கோஷ்டி மனப்பான்மை மிகவும் ஆபத்தானது.

—ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு

பூதானம்—ஒரு சமுத்திரம்

'சிலர் கெட்ட நிலத்தைப் பூதானத்துக்குக் கொடுத்துப் புகழ் அடைகிறார்களே? இது சரியா' என்று ஒரு அன்பர் கேட்கிறார்.

பூதானம் ஒரு சமுத்திரம். அதில் கங்கை போன்ற நல்ல நதிகளும் வந்து சேர்கின்றன. கெட்ட கழிவுத் தண்ணீரும் வந்து கலக்கிறது. 'நீ அசுத்தம்; என்னிடம் வராதே' என்று சமுத்திரம் எப்படிச் சொல்ல முடியும்?

இறுதியில் நில விநியோகம் செய்யும் சமயத்தில் கெட்ட நிலத்தையும் பயன் படுத்த சம்பத்து தானம் சேர்ந்து உதவ வேண்டும்.

—ஆசார்ய விநோபா பாவே.

சுயநலம்

இன்று மக்கள் தம் சுயநலத்துக்காகவே வாழ்கிறார்கள்; சண்டையிடுகிறார்கள். எல்லோரும் தங்களின் நலத்துக்காகவே பிறருடன் போரிடுகிறார்கள். இச் சுயநலத்தால் மனிதத் தன்மையே அழிந்து விடுகிறது. இச் சுய நல மனப்பான்மையை ஒழிப்பது இன்றைய சமுதாயத்துக்கு அவசியமாகும்.

ஒவ்வொருவரும் தம் சுய நலத்துக்காகவே முயற்சி செய்கிறார்கள். ஆனால் பெரும்பான்மையோர் வெற்றி பெறுவதில்லை. நூற்றில் பத்துப் பேர்தான் வெற்றி பெற்றுச் சுகமடைகிறார்கள். மீதி தொண்ணூறு பேர் தோல்வியுற்றுக் கஷ்டமடைகிறார்கள். இந்தச் சுயநலப் போராட்டத்தில் தர்மம், அதர்மம், சத்தியம், அசத்தியம் என்பவற்றைக் கவனிக்காமல் ஈடுபடுகிறார்கள்.

நம் நாட்டின் நிலை இப்படியே இருக்குமானால், நம் சுயநல மனப்பான்மை மாறவில்லையானால் மிகவும் ஆபத்தாக முடியும்.

சேவையே எல்லோருடைய கடமை என்று கருதும் சமுதாயத்தையே நாம் விரும்புகிறோம். அத்தகைய சமுதாயத்தில் நூற்றுக்கு நூறு வெற்றிதான். ஒருவர் கூடத் தோல்வியடைய மாட்டார். இன்று கோடிக்கணக்கான மக்கள் உணவின்றி உடையின்றித் தவிக்கிறார்கள். ஆனால் நாம் அமைக்கும் சமுதாயத்தில் ஒருவர் உணவின்றி இருந்தால், அவருக்கு ஆயிரக்கணக்கான மக்கள் உணவு கொடுக்க முன்வருவார்கள். எல்லோரும் சுய நலத்தை விட்டுச் சுகமாக இருப்பார்கள்.

—ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண்

சர்வோதய வழி

சர்வோதய சித்தாந்தம், எல்லா நாடுகளுக்கும், எல்லாக் காலங்களுக்கும் சமமாகப் பொருந்தும் ஒன்று. தனி மனிதன் தன் சேவை முழுவதையும் சமுதாயத்துக்குச் சமர்ப்பணம் செய்வானாக! தனி மனிதனுடைய மலர்ச்சிக்குச் சமுதாயம் பூரண வாய்ப்பளிப்பதாக! சமுதாயத்தில் ஒருவரும் துன்பப்படாமல் இருக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் சிந்திப்பாராக! பிறருடைய

சுகத்தில் சுகமும், பிறருடைய துயரத்தில் துயரமும் கொள்ளுதலே சர்வோதய வழியாகும்.

—ஆசார்ய விநோபா பாவே

கிராம சமாதானம்

கிராமங்கள் தங்கள் அதிகாரத்தை மந்திரிகள் கையில் கொடுத்துவிட்டு, அவர்களுடைய தயவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. பூதானம் கிராமத்துக்குச் சுய ராஜ்யம் கொண்டுவரும். இப்பொழுது கிராமப் பஞ்சாயத்துக்கள் வந்திருக்கின்றன. அதிலும் கட்சித் தகராறு. நிலம், பணம் உள்ளவர்களிடமே அதிகாரம் இருக்கிறது. அதனால் கிராமத்தின் நிலை மோசமாகிறது. கிராமத்தின் எல்லா வேலைகளையும் கிராமத்தினரே கவனிக்க வேண்டும்.

ஒரு நிலப்பிரபு எனக்கு வாழைப் பழங்கள் கொண்டு வந்தார். எனக்கு வாழைப்பழம் தேவையில்லை; அது விளையும் மண் தான் வேண்டும். கொஞ்சம் நிலம் கொடுத்தால் நிலப்புரட்சி ஏற்படுமா ? முதலாளி—தொழிலாளி பேதம் போக வேண்டும். அதற்குக் கிராம தானம் வேண்டும்; கிராமதானம் அஸ்திவாரம்; அதன் மேல் சுவர்கள் வைக்க வேண்டும். சுவர்கள் கிராமக் கைத்தொழில்கள். பின்னர் கூரை போட வேண்டும். சமத்துவம் தான் கூரை. சுதந்திரம் என்ற கொடியை ஏற்ற வேண்டும்.

சீனவிலும் ருஷ்யாவிலும் இரத்தப் புரட்சியின் மூலம் நிலப்பிரச்னை தீர்ந்துள்ளது. அங்கு சாந்தியில்லை. சமாதான வழியில் நிலப்பிரச்னை தீர்ந்தால்தான் சாந்தி நிலவும். உலக சமாதானத்துக்குக் கிராம சமாதானமே அடிப்படை.

—ஆசார்ய விநோபா பாவே

# சோமனுதர் ஆலய வரலாறு

சௌராஷ்டிரத்தில் பிரபாஸாவிலிருக்கும் சோமனுதர் ஆலயம் கர்ணபரம்பரைப்படி உலகம் தோன்றிய நாள் முதல் இருப்பதாகக் கூறப்படுகிறது; எனினும் இது சரித்திர காலத்துக்கு முற்பட்டதாக இருக்கக்கூடும். சரஸ்வதி நதி சமுத்திரத்தில் சங்கமமாகும் புனித ஸ்தலத்திலே பிரபாஸா இருக்கிறது. புராணக் கதைப்படி சோமர், (சந்திரன்) தக்ஷனின் சாபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இவ்விடத்தில் நீராடி சிவபெருமானைப் பூஜித்ததாகச் சொல்லப்படுகிறது. அதனுல்தான் இக்கோவிலின் பெயரும் சோமனுதர் ஆலயம் என்று வழங்கிவருகிறது. பிரபாஸாவிலுள்ள ஈசுவரனின் பெருமை பண்டைக்கால முதலே பிரபலமடைந்திருக்கிறது. ஹிந்து புண்ணிய தீர்த்தங்களிலே முதன்மையானதாக பிரபாஸா கருதப்பட்டுவந்தது. இந்தப் புண்ணிய ஸ்தலத்துக்கு மற்ருெரு விசேஷமென்னவென்ருல், கிருஷ்ண பகவான் தமது பூத உடலை பிரபாஸாவில் சோமனுதராலயத்துக்குச் சற்று தூரத்திலுள்ள பாலக தீர்த்தத்தில் விடுத்துச் சென்றதாக மக்கள் நம்புவதாகும். இதனுல் இதன் மகத்துவம் இன்னும் அதிகரித்துள்ளது.

பிறகு தக்ஷனின் சாபம் தேவர்கள் தலையீட்டின் பயனுக மாற்றப்பட்டு, சோமன் தன் வாழ்க்கை முழுவதும் கூடுவதும் குறைவதுமாக இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இது சோமனுதபுரத்தின் எதிர் காலத்தையும் நிர்ணயித்தது. இங்கு கட்டப்பட்ட மூன்ருவது

ஆலயமும் இடித்துக் கட்டப்பட்டதுதான். எனவே, சாபக் கேட்டின் விளைவாக, இக் கோவில் 1026-ம் ஆண்டு ஜனவரியில் கஜ்னி மன்னன் அபு-இ-காஸிம் மகமதுவால். நாசமாக்கப்பட்டது. இது மறுபடியும் 1045-ம் வருஷத்தில் கட்டப்பட்டிருக்கவேண்டும். ஏனென்றல் ஒரு கல்வெட்டி லிருந்து சீயாகா (11), பிரபாஸாவுககு 1045-ம் வருஷம் விஜயம் செய்து ஸ்வர்ண துலாவைபவத்தை நடத்தி வைத்ததாகத் தெரியவருகிறது இந்தியாவுக்கு வந்த அராபிய யாத்ரிகர்கள் யாவரும் சோமனுத பட்டணத்தின் தெய்வீகச் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் கண்டு வியந்திருக்கின்றனர். 11-வது நூற்ருண்டிலேயே இதன் சிறப்பைப் பற்றி ஆல்-பருனி கூறியிருப்பதாவது:- "ஹிந்துஸ்தானத்திலே கடற்கரையோரத்திலே சோமனுதபுரம் என்றழைக்கப்படும் பெரிய நகரம் ஒன்றுள்ளது. இது, முஸ்லீம்களுக்கு மெக்கா எவ்வளவு புனிதமானதோ அவ்வளவு ஹிந்துக்களுக்குப் புனிதமானது"

சோமனுதபுரம் பெரிய வர்த்தக ஸ்தலமாகவிருந்ததாக 13-ம் நூற்ருண்டில் மார்க்கோபோலோ குறிப்பிட்டிருக்கிருர்.

ஐந்தாவது சோமனுதராலயம் 1169-ம் வருஷத்தில் பவ பிரஹஸ்பதியால் கட்டப்பட்டது. கோவிலுக்குப் பொற்கோபுரங்களை இவர் கட்டினுர். இதற்குப் பின் 100 வருஷங்கள் வரை பிரபாஸா பட்டணம் பெரிய வியாபார ஸ்தலமாகவும், அகில இந்தியப் புகழ் வாய்ந்த புண்ணிய ஸ்தலமாகவும் இருந்து வந்தது. 1178-ம் ஆண்டில் பிரபாஸா பட்டணத்தின் மன்னனுகப்பட்டத்துக்கு வந்த போல பீமன் என்ற இரண்டாவது பீமதேவன் இந்த ஐந்தாவது ஆலயத்தில் கோமேஸ்வர மண்டபத்துக்கு அடுத்து மேகநாத மண்டபத்தைக்கட்டினுன்.இவ்வாலயம்

பின்னர் அலாவுதீன் கில்ஜியின் படைத் தலைவனுன ஆலப்கானின் ராணுவத்தினரால் அழிக்கப்பட்டது.

ஜுனைகாட் குடசாம மன்னனுன மகிபாலன் 1351-ஆண்டு வரையுள்ள காலத்தில் சோமனுதராலயத்தை ஜீர்ணோத் தாரணம் செய்து மறுபடியும் குஜராத்தின் கவர்னராயிருந்த ஜாபர்கானுல் 1393-ம் வருஷம் இடிக்கப் பட்டது,மறுபடியும் பழுதுபார்க்கப் பட்டது.1706-ம் ஆண் டில்ஒளரங்கசீப் இக்கோவிலை இடித்து, ஆலய மணிகளின் ஓசையை அடங்கச் செய்தார். ஆனுல் பழைய கோவி லிருந்த இடத்துக்குச் சிறிது தூரத்தில் 1783-ம் ஆண்டில் இந்தூர் ராணி அஹல்யாபாய் புதிய கோவில் ஒன்றைக் கட்டினுர்.

1947-ம் வருஷம் நவம்பர் மாதம் ஜுனைகாட் ராஜ்யம் இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டபோது, இடிந்து கிடந்த பண்டைக் கோவிலை மறுபடியும் கட்டுவதென்று இந்திய சர்க்கார் முடிவு செய்தனர்.

சோமனுதராலயத்தை மறுபடியும் கட்டிப் பராமரித்து வரவும், கிருஷ்ண பகவான் தம் சடலத்தை நீத்த தேகோத்ஸர்க்கத்தைப் புதுப்பிக்கவும், ஆலயத்தைச் சார்ந்த இதர ஸ்தாபனங்களைச் சீர் செய்து பாதுகாத்து வரவும், சுற்றுப்புறச் சூழ்நிலையைச் சீராக்கிப் பண்டைய தெய்வீகத் தன்மையை ஏற்படுத்தவும் எட்டுப் பேர் களடங்கிய சோமனுதர் தர்மகர்த்தர்கள் குழு 1949-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நிறுவப்பட்டது.

பிரபாஸாவில் ஏழாவது சோமனுதர் ஆலயத்தின் அஸ்திவாரக் கல்லை 1950-ம் வருஷம் மே மாதம்8-த் தேதி ஜாம் சாஹிப் நாட்டினுர்.

சில முகமதிய சரித்திராசிரியர்கள்,சோமனுதர் விக்கிரக மிருந்த கர்ப்பக் கிரகத்தில் விலை மதிக்கவொண்ணுத

சிங்கார தீபங்கள் பல இருந்தனவென்று கூறியிருக்கிறார்கள். விக்கிரகம் இருந்த அறைக்கு முன்னர் 200 மணங்கு எடையுள்ள கனத்த தங்கச் சங்கிலி ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. பாதுகாப்பு அறையில் விலை உயர்ந்த கற்களும், தங்கம், வெள்ளி உருவங்களும் இருந்தனவாம். இவை எல்லாம் உண்மையாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும்சரி; சோமனாதராலயம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும், சிற்பச்சீரின் சிறப்பை எடுத்துக் காட்டுவது மான சிறந்த கோவிலாக இருந்துவந்த தென்பதை யாரும் மறுக்கமுடியாது. தொன்மைப் பெருமையுடனும், புனித ஜோதியுடனும் அது மறுபடியும் தேஜோமயமாக விளங்கும் நன்னாள் ஒரு பெருநாளாகவே இருக்கும்.

# மனப் போக்கு

வி. எச். சுப்ரமண்ய சாஸ்திரி

மலர் சொரியும் மரங்கள் அடர்ந்த மந்தர மலைச் சாரலில் பிருகு முனிவர் ஒரு சமயம் தவம் செய்தார். அவர் மகன் பெயர் சுக்கிரன்; சிறந்த புத்திமான்; ஒளியே உருவெடுத்தவன்; எழிலுற்ற அவன் மதிவதனத்தில் தேஜஸ் திகழ்ந்தது. கடும் தவத்தில் ஆழ்ந்திருந்த தந்தைக்கு சுக்கிரன் பணிவிடை செய்து வந்தான்.

சில வேளையில் பிருகு முனிவர் மலையில் செதுக்கிய பதுமை போல் சமாதியில் சமைந்திருப்பார். சுக்கிரனோ தங்க மேடையில் மலர்ப் படுக்கையில் துயில் கொண்டு இன்புறுவான். ஒரு சமயம் தோட்டங்களில் ஊஞ்சல் ஆடிக் களித்திருப்பான். எப்பொழுதும் ஆகாயத்திற்கும் பூமிக்கும் இடையே நிற்கும் திரிசங்குவைப் போல் அவன் அறிவிற்கும் ஆணவத்திற்கும் நடுவில் நிற்பான்.

ஒரு சமயம் பிருகு நிர்விகல்ப சமாதியில் ஆழ்ந்திருந்தார். சுக்கிரன் பகைவரை வென்ற வேந்தன் போல் கவலையின்றி ஒருபுறம் வீற்றிருந்தான். அப்பொழுது ஆகாயத்தில் செல்லும் ஓர் அப்ஸரஸைக் கண்டான். அவள் பெயர் விச்வாசி. வெண் முகில் திரண்ட வான வெளியில் பாலாழி நடுவே தோன்றிய லக்ஷ்மி போல் தோன்றினாள். மந்தார மாலை சூடிய அவள் குழல் காற்றில் அசைந்தது. அணிகள் கலகலவென ஒலித்தன காற்று அவள் மேனியின் நறுமணத்தை வான் வெளி முழுவதும் பரப்பியது. அவளது உடலின் ஒளி அவ்விடத்தையே அமிருதம் தடவியதுபோல் ஆக்கியது. கொடி

உருவம் பெற்ற எழில் போன்ற அவளைப் பார்த்த சுக்கிரனின் மனம் முழுமதியைக் கண்ட கடல் போல் பொங்கிற்று. அவளும் அவனைப் பார்த்து தன் நிலையிழந்தாள் ஆகிலும் தன் வழியே போய்விட்டாள்.

சுக்கிரன் அவளையே எண்ணி யெண்ணிக் கண் மூடினான். மனோராஜ்யத்தை நாடலானான். 'இவள் தேவ லோக மாதல்லவா?' என்று நினைத்தான். உடனேயே அவளைத் தொடர்ந்து தேவலோகம் சென்றான். 'இதோ மந்தாரமலர் சூடிய தேவர் பொன் மேனியோடு விளங்குகிறார். இதோ நீலோற்பலம் போன்ற கண்களோடு முகத்தில் புன்னகை தவழ தேவ மாதர் நிற்கின்றனர். ஒருவர் மற்றொருவரின் நிழல் போலத் தோற்றுகிறார். இங்கு வானோர் குழுமி நின்றுகொண்டு பாடுகிறார். இதோ தேவ கங்கை ஓடுகிறது. தங்கத் தாமரைகளில் பிரம தேவனின் அன்னம் விளையாடுகிறது. இதோ சந்திரன், இந்திரன், சூரியன் முதலிய லோகபாலர் தம் உடல் ஒளியால் சூழப்பட்டு அக்கினியின் நடுவே நிற்பவர் போல் தோற்றுகின்றனர். இதோ ஐராவதம். இங்கு பூவுலகிலிருந்து புண்ணியம் செய்து தேவ வடிவம் பெற்றவர் நிற்கின்றனர். இப்புறம் இந்திரனின் தோட்டத்தில் ஊசல் ஆடுகின்றனர் அப்ஸரஸ்கள். இங்கு பாரிஜாத மலரில் புரண்டு தவழ்ந்து வருகிறதுஇளம் காற்று. இதோ தும்புருவும் நாரதரும் தம் வீணையை மீட்டிக் கொண்டு பாடுகின்றனர். அதைக் கேட்டு தேவ மாதர் ஆடுகின்றனர். மன்மதனால் செருக்குற்ற தேவமாதர் கொடிகள் மரங்களைச் சுற்றியிருப்பது போல் தேவ ராஜனைச் சூழ்ந்து நிற்கின்றனர். இதோ இங்கு கற்பக விருக்ஷங்கள் நவரத்தினங்களாகும் மலர்கள் நிறைந்து விளங்குகின்றன, இதோ தேவேந்திரன் இங்கு சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார்.'

இவ்விதம் யோசித்தவாறே சுக்கிரன் தேவ சபையில் தேவேந்திரன் தன்னை வணங்கக் கண்டான். தேவ ராஜன் எழுந்து அன்புடன் கையைப் பிடித்து சுக்கிரனைத் தன் அருகில் அமரச் செய்தான். “தாங்கள் வந்ததால் இவ்வுலகம் சிறப்புற்றது; “தாங்கள் வெகுகாலம் இங்கு இருக்க வேண்டும்” என்று வேண்டிக்கொண்டான். சுக்கிரன் ஆசனத்தில் அமர்ந்து பூர்ண மதி போல் துலங்கினுன். சபையோர் அனைவரும் அவனை வணங்கினர்.

இவ்விதம் இறக்காமலேயே தேவலோகம் சென்ற சுக்கிரன் தேவராஜனருகில் சற்றுநேரம் வீற்றிருந்தான். பிறகு தேவலோகத்தைச் சுற்றிப் பார்க்க விரும்பி வெளியில் கிளம்பினுன். அவ்வூரின் அழகைக் கண்டு களித்தான். அப்புறம் அழகே உருவெடுத்திருக்கும் மங்கையரைக் காண வந்தான். அங்கு மடமான் போன்ற கண்களுடன் தன் மனத்தைக் கவர்ந்த அந்தக் கட்டழகியை மரங்களுக்கிடையே ஒட்டு மாங்கிளையைப் போல் பொலிவுற்று நிற்கக் கண்டான். அவன் மனம் சந்திரனைப் பார்த்த சந்திரகாந்தம் போல் உருகியது. அவளும் அவனைக் கண்டு மயக்கமுற்ருள். அச்சமயம் இருவரும் காலைக் கதிரவனும் தாமரை மலரும் போல் மலர்ச்சியுற்றனர். காமதேவன் அவளைத் தூக்கியெடுத்து சுக்கிரனிடம் கொடுத்தான் போலும்.

அவள் தோழிகள் மாலைப் பொழுதில் பறவைகள் சென்று மறைவது போல் அவ்விடத்திலிருந்து மறைந்து விட்டனர். பெண்மயில் மேகத்தைக் கண்டு பரவசமாவது போன்ற மகிழ்வுடன் அவள் சுக்கிரனிடம் வந்தாள். வெண்மையே உருவெடுத்த வீடு; அதன் நடுவே தந்தக் கட்டில்; அதில் விரித்த மெல்லிய சயனம்; பாற்கடலில் பரமனைப் போல் சுக்கிரன் அதில் சயனித்தான். அவளும் அவன் கையைப் பற்றிக் கொண்டு குனிந்த முகத்துடன் அருகில் அமர்ந்தாள்.

அக் காட்சி சுழலும் வண்டினங்கள் நிறைந்த மலர் மஞ்சரி அவன்மேல் விழுந்தது போல் தோன்றிற்று.

தாமரை ஓடையில் இரு வண்டுகள் பூவிலிருந்து பூவுக்குத் தாவி இன்புறுவது போல் அவ்விருவரும் அந்த நந்தவனத்தில் சுற்றிக் களித்தனர். சில காலம் தேவ கங்கைக் கரையில் மதமுற்ற அன்னங்களுடன் தங்கத் தாமரைகளிடையே ஓடி விளையாடினர். பாரிஜாதத்தின் அடியில் தேவரோடு அமுதத்தைப் பருகி மெய்ம் மறந்தனர். வித்யாதரப் பெண்களுடன் சைத்ராதம் எனும் தோட்டத்தில் களியாடினர். சில நாட்கள் கைலாஸத்தில் சிவகணங்கள் பாடக் கேட்டு இரவை இன்பமாகக் கழித்தனர். மந்தர மலையின் குகையில் அவர்கள் அறுபது ஆண்டுகளை கண நேரம்போல் கழித்தனர். பாற்கடலின் கரையில் கிருதயுகத்தில் ஒரு பகுதி வாழ்ந்தனர். பிரம லோகத்தில் அவருக்கு ஒரு கற்ப காலம் சென்றது. பிறகு அமராவதியில் நான்கு யுகங்கள் கடந்தன. நல்வினை தீர்ந்ததால் இருவரும் பூமியில் விழுந்தனர். பாறை மேல் விழும் அருவியைப் போல் அவர்களுடைய உடல் நூறு துண்டுகளாகச் சிதறின. அதனுல் அவர்கள் கூடிழந்த பறவைகளைப்போல் ஆகாயத்தில் சுற்றினர். பிறகு சந்திர கிரணம் வாயிலாக பனித்துளியாக மாறினர். கீரையாக முளைத்தனர். அக்கீரையை,தசார்ண தேசத்தில் ஓர் அந்தணர் சாப்பிட்டார்; ரத்தமாக மாறி அவர் மனைவியிடம் பிள்ளையாகப் பிறந்தான் சுக்கிரன். முனிவரின் சேர்க்கையை அடைந்து மேரு மலையில் ஒரு மன்வந்தரம் கடும் தவம் செய்தான். அவனுக்கு பெண்மானிடம் ஒரு மனித வடிவம் கொண்ட பிள்ளை பிறந்தான். அந்தப் பிள்ளைக்கு, ‘எல்லா நன்மையும் வேண்டும். பணம் வேண்டும். பிணியற்ற வாழ்வு வேண்டும்’ என்று கவலையுற்று தவத்தை இழந்தான். காலக்கிரமத்தில் அந்த உடலையும்

நீத்தான். பிறகு மத்ரதேச மன்னனுக்கு மகனாகப் பிறந்து கொஞ்ச காலம் அரசு செலுத்தி, கிழத்தன்மையால் இறந்தான். அடுத்த ஜன்மத்தில் முன் செய்த தவத்தின் நினைவால் முனியின் மகனாகப் பிறந்து ஸமங்கா நதிக்கரையில் பெரிய மரம்போல் நின்று கவலை நீக்கித் தவம் செய்தான்.

இவ்விதம் சுக்கிரனின் மனம் சுற்றிக்கொண்டிருக்கும் பொழுதே அனேகமாயிரம் ஆண்டுகள் கடந்தன. தந்தையின் எதிரில் இருந்த அவன் ஸ்தூல உடல் தரையில் வேர் அறுந்த மரம்போல் விழுந்தது. காலக் கிரமத்தில் வெயிலில் உலர்ந்து மழையில் நனைந்து தோற்பையாகிவிட்டது. விருப்பு வெறுப்பு இரண்டையும் வெறுத்த பிருகு தவம் செய்யும் இடமானதாலும் அவர் தவச் சிறப்பினாலும் சுக்கிரனின் உடலைப் பறவைகளோ விலங்குகளோ சாப்பிடவில்லை. கல்லிலும் தரையிலும் காற்றால் அடிப்பட்டுப் புரண்டது.

ஒரு நாள் தவம் கலைந்து பிருகு முனிவர் கண் திறந்தார். எதிரில் எப்பொழுதும் புண்ணியமே உருவெடுத்தவன் போல் வணக்கத்துடன் நிற்கும் மைந்தனைக் காணவில்லை. உருவெடுத்த துரதிர்ஷ்டம் போலும் ஏழ்மையின் வடிவம் போலும் வறண்டு புரண்டுகொண்டிருக்கும் அவனுடலைப் பார்த்தார். வெறும் தோற்பையாகக் கிடப்பதைப் பார்த்ததும் தம் மகன் இறந்ததாக எண்ணினார். எமனிடம்தான் அவருக்குக் கோபம் பொங்கி எழுந்தது. சாபம் கொடுக்கச் சித்தமானார். உடனே யமன் ஆறு முகங்கள், ஆறு கைகள், காதில் குண்டலம், உடலில் கவசம், கையில் கத்தி, பாசம் இவற்றுடன் முனிவர் முன் தோன்றினான். நல்வார்த்தையாக அவரிடம் கூறுவான்:

"உலக இயல்பை அறிந்த தங்களைப்போன்ற மகான்கள் காரணமிருந்தாலும் கோபமடைய மாட்டார்; காரணமில்லாவிடில் கேட்க வேண்டுமா? தாங்கள் பெரும் தபோதனர். நான் உலக நியதியைக் காப்பவன். வீணுக மதியிழந்து சாபமிட்டுத் தவத்தை அழித்துக்கொள்ள வேண்டாம். பிரளய காலத்து அக்னிகூட என்னை எரிக்க முடியாதே. தங்கள் சாபமா என்னை எரிக்கப்போகிறது? மும் மூர்த்திகளையும் விழுங்கும் காலன் நான். தங்கள் மகன் தன் வினைப்பயனுல் இக்கதியை அடைந்தான். அதை உணராமல் என்னைச் சபிக்கத் துணிந்தீரே! மாந்தர் அனைவருக்கும் ஸ்தூல சரீரம் சூக்ஷ்ம சரீரம் அல்லது மனோமய சரீரம் என இரண்டு இருப்பதைத் தாங்கள் அறியவில்லையா? அந்த மனம் தானே எல்லாக் காரியங்களையும் செய்கிறது. தாங்கள் சமாதியில் இருக்கும்பொழுது தங்கள் மகன் சுக்கிரனின் மனம் பறவை கூட்டை விடுவது போல் உடலை விட்டு தேவலோகம் சென்றது. அங்கு அவன் விச்வாசி என்ற தேவமாதுடன் பல காலம் இன்புற்றிருந்தான் பிறகு புண்ணியம் கழிந்தவுடன் பூமியை அடைந்தான். பல ஜன்மங்கள் எடுத்தான். கடைசியாக இப்பொழுது அந்தணனின் மகனுகப் பிறந்திருக்கிருன். அவன் பெயர் வாசுதேவன். பல வித்தைகளைக் கற்றிருக்கிருன். ஸமங்கா நதிக்கரையில் தவம் செய்கிருன். ஜடை அணிந்து ஜபமாலை தரித்துப் புலன்களை அடக்கி எட்டாயிரம் ஆண்டுகளாக தவம் செய்து கொண்டிருக்கிருன். அவனைக் காணவேண்டுமானுல் ஞானக் கண்ணைத் திறந்து பாரும்!"

இவ்விதம் யமன் கூறியதைக் கேட்டவுடன் பிருகு முனிவர் ஞான சக்தியின் உதவியால் மனோமய சரீரத்துடன் ஸமங்கா நதிக்கரையை அடைந்தார். மைந்தனைப்

பார்த்தார். அவர் மனத்தில் கண்ணுடியில் உலகம் தெரிவதுபோல் சுக்கிரனின் வரலாறு முழுவதும் தெரிந்தது. பிறகு மீண்டும் மந்தர மலையிலிருக்கும் தம் உடலில் புகுந்து கொண்டார். ஆச்சரியத்தால் மலர்ந்த கண்களோடு காலனைப் பார்த்துக் கூறுவார்: "பகவானே, நாங்கள் ஒன்றும் அறியாத குழந்தைகள். தங்களைப் போன்றவரின் புத்திதான் முக்காலத்தையும் சரியாகப் பார்க்கிறது. தாங்கள்தான் உலகமாகும் இந்திர ஜாலத்தைப் படைக்கும் மனத்தின் போக்கை அறிவீர்கள். மனப்போக்கை அறியாமல் தங்கள்பால்கோபமுற்றதை எண்ணி வருந்துகிறேன். தாங்கள் கூறியபடி மனத்தாலேயே சுக்கிரனின் செயலை நேரில் பார்த்தேன். ஸ்தூல சரீரம் இருந்த போதிலும் மாந்தர்களுக்கு மனம்தான் முக்கியம். அது தான் உலகைப் படைக்கிறது."

இவ்விதம் கூறியதைக் கேட்ட காலதேவன், "முனிவரே, குயவன் குடத்தை ஆக்குவது போல் மனம்தான் எல்லா உடலையும் படைக்கிறது. புதிதாகப் படைப்பதும் படைத்ததை அழிப்பதும் மனம்தான். உலகனைத்தையும் படைக்கும் திறமையும் மனத்தில்தான் புதைந்து கிடக்கிறது. மும் மூர்த்திகளை உருவாக்கி அவருக்கு அடங்கி நடப்பதுபோல் காட்டுவதும் மனத்தைத்தவிரவேறில்லை. நரகம் சுவர்க்கம்யாவற்றையும்உண்டாக்கிஉலகை ஆட்டி வைக்கும் திறம் மனத்தைத் தவிர வேறு எதற்குண்டு? யாவும் மனம்தான். வீணாக அதிகம் பேசுவதால் பயன் என்ன? உங்கள் மைந்தன் இருக்கும் இடத்திற்குச் செல்வோம்" என்று கூறி பிருகுவின் கையைப் பிடித்தார்.

பிறகு இருவரும் மந்தர மலையிலிருந்து கிளம்பி ஸமங்கா நதியின் கரைக்குச் சென்றனர். அங்கு உலகப் பற்றை அறுத்தெறிந்த ஞானம் பெற்ற நிர்விகல்ப சமாதியில் மூழ்கியிருக்கும் சுக்கிரனைப் பார்த்தனர். அப்பொழுது

காலதேவன் பிருகுவினிடம், "முனிவரே, இதோ உங்கள் மகன். இவன் சமாதி கலைந்து எழுந்திருப் பானுக" என்று கம்பீரமாகக் கூறினுர்.

சுக்கிரன் கண்திறந்து சூரியனையும் சந்திரனையும் போல துலங்கும் பிருகுவையும் காலனையும் பார்த்தான். எழுந்து வணக்கமாக நமஸ்காரம் செய்தான். "தங்களைப் பார்த்ததால் இப்பொழுது மனச் சாந்தியடைந்தேன். சாஸ்திரம், தவம், படிப்பு முதலியவற்ருல் விலகாத ஆண வம் இப்பொழுதுதான் விலகியது. பெரியோர்கள் கண் பார்வையினுல் உண்டாகும் சந்தோஷம் அமிருதத்தில் மூழ்கினுல்கூட கிடைக்காது போலும். கால்நடையாக இங்கு என்னைத் தேடி வந்த நீங்கள் யார்?" என்று அன்புடன் வினவினுன்.

இதைக் கேட்டு பிருகு முனிவர் முன் ஜன்மத்திய மகனைப் பார்த்து, "உனக்கு அறிவுக் கண் திறந்து விட்டது. நீயே அறிந்துகொள். நீ அஞ்ஞானி அல்ல" என்றுரைத்தார்

சற்று நேரம் கண்களை மூடிக்கொண்டிருந்த சுக்கிரன் சந்தோஷமும் ஆச்சரியமும் மேலிடக் கூறுவான்,"அனைத் திற்கும் காரணமான பரமனின் ஆணைதான் சிறந்தது, அதனுல்தான் உலகச் சக்கரம் சுழலுகிறது. நான் எவ்வளவோ ஜன்மங்களையும் எடுத்து விட்டேன். பல அனுபவங்களையும் அனுபவித்து விட்டேன். நான் அனுபவிக்காததும், செய்யாததும், பார்க்காததும் கிடை யாது. இப்பொழுது எதை அறிய வேண்டுமோ அதை அறிந்து விட்டேன். பல ஜன்மங்கள் எடுத்துச் சுற்றித் திரிந்த களைப்பு எனக்குத் தீர்ந்து விட்டது. மந்தர மலை யில் எனது உலர்ந்தஉடல் கிடக்கிறதல்லவா? தந்தையே, அங்கு செல்வோம். உண்மையில் எனக்கு இப் பொழுது

விருப்பு வெறுப்பு கிடையாது. சர்வேசனின் ஆணைப்படி எது நேருகிறதோ அதைச் செய்கிறேன்."

இவ்விதம் பேசிக் கொண்டு அம் மூவரும் மந்தர மலைக்கு வந்தனர். அங்கு சுக்கிரன் உலர்ந்து கிடக்கும் தன் உடலைப் பார்த்து, "தந்தையே, தாங்கள் ஆசையுடன் தாலாட்டிச் சீராட்டி வளர்த்த உடல் இதோ கிடக்கிறது. இதற்குத்தான் நான் மலர் சூடினேன். கற்பூரம் தடவினேன். தேவமாதரும் இதைத்தான் அணைத்து இன்புற்றனர். ஏ உடலே, இப்பொழுது உன் பெயர் பிணம் அல்லவா? உலர்ந்து எலும்பு மட்டும் மீதியாகக் கிடக்கும் நீ ஏன் என்னை பயமுறுத்துகிறாய்? மாலை அணிந்து அழகு செய்த இந்த உடலில் இப்பொழுது எறும்பு ஊருகிறது. பெண்கள் கண்டு மயக்கமுற்ற இவ்வுடலைக் கண்டு காட்டு விலங்குகளும் பயப்படுகின்றனவே. இந்த உடலில் பற்றுதலை வைத்து என்னைத் துன்புறுத்தியது இம்மனம்தானே! அம்மனம் அடங்கியதால் நான் கவலை நீங்கி இன்புற்றிருக்கிறேன்." என்று சொல்லிக் கொண்டே இருந்தான்.

அதனிடையே குறுக்கிட்டு காலதேவன், "சுக்கிர, ஸமங்கா நதிக்கரையில் தவம் செய்த இந்த உடலை விட்டு இந்த உடலுக்குள் புகுவாயாக. இந்த உடலில் இருந்து கொண்டு அசுர குருவாக நீ வெகு காலம் வாழ வேண்டும். இக்கல்பத்தின் முடிவில் வாடிய பூமாலையைப்போல் இந்த உடலை விட்டு நீ பரம்பொருளோடு சேருவாய். அதுவரையில் நீ ஜீவன் முக்தனாக இருப்பாய். உங்கள் இருவருக்கும் க்ஷேமம் உண்டாகட்டும். நான் போய்வருகிறேன்" என்று கூறிச் சென்றார்.

காலதேவன் பிரிவாற்றாமையினால் தந்தையும் மகனும் சற்று கண்ணீர் வடித்தனர். சுக்கிரன்

வாசுதேவன் என்ற பெயர் கொண்ட உடலை விட்டு சுய உடலை அடைந்தான். உடனே வாசு தேவ உடல் வேர் அறுந்த மரம் போல் கீழே விழுந்தது. பிருகு முனிவர் உலர்ந்த சுக்கிரன் உடலில் கமண்டல ஜலத்தை மந்திரத்தோடு தெளித்தார். உடனே மழைக் கால நதிகளில் வெள்ளம் போல் சுக்கிரன் உடலில் ரத்தக் குழாய்களில் ரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. வசந்தத்தில் தழைத்து எழிலுற்ற கொடியைப் போல் சுக்கிரனின் உடல் ஒளி பெற்றுத் துலங்கியது.

சுக்கிரன் எழுந்து தந்தையை வணங்கினுன். தந்தை அவனை எழுப்பித் தழுவிக் கொண்டார். தந்தை மகன் என்ற அபிமானம் பிருகு முனிவரைப் பற்றிக் கொண்டது. வெகு நாள் பிரிந்திருந்த அவ்விருவரும் இரவின் முடிவில் ஆதித்தனும் தாமரையும் போல் சந்தோஷமாக விளங்கினர். பிறகு அந்த வாசுதேவன் என்ற பெயர் கொண்ட உடலை முறைப்படி எரித்தனர். உலகத்தினுடைய தர்ம நெறியை, அறிவுற்ற யார்தான் புறக்கணிப்பர் ?

இவ்விதம் தந்தையும் மகனும் ஜீவன்முக்த நிலையைப் பெற்று இன்பமாகக் காலம் கழித்து வந்தனர். காலக் கிரமத்தில் சுக்கிரன் அசுரர்களுக்குக் குரு ஸ்தானம் பெற்ருன். பிருகுவும் நித்யானந்தத்தில் திளைத்திருந்தார்.

# செய்திக் கோவை

## ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் பதினறு நாடுகள் புதிய அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளப் பெற்றன. அவை அல்பேனியா, ஜோர்டான், அயர்லாந்து, போர்த்துக்கல், ஹங்கேரி, இத்தலி, ஆஸ்திரியா, ருமேனியா, பல்கேரியா, பின்லந்து, இலங்கை, நேபாளம், லிபியா, கம்போடியா, லாவோஸ், ஸ்பெயின் முதலியன.

ஜப்பானையும் வெளி மங்கோலியாவையும் அங்கத்தினர்களாக்கச் செய்த முயற்சிகள் தோல்வியுற்றன.

## பிரிட்டன் தொழிற்கட்சித் தலைவர்

ஸ்ரீ அட்லி, பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைமைப் பதவியிலிருந்து ராஜிநாமா செய்ததால், புதிய தேர்தல் நடைபெற்றது. ஸ்ரீ கெயிட்ஸ்கல், ஸ்ரீ ஹெர்பர்ட் மாரிஸன், ஸ்ரீ அனுரீன் பெவான் முதலியோர் போட்டியிட்டனர். அதிக ஓட்டுக்கள் பெற்ற ஸ்ரீ கெயிட்ஸ்கல் தலைவராக தேர்ந்தெடுக்கப் பெற்ருர். ஸ்ரீ கெயிட்ஸ்கலுக்கு நாற்பத்தொன்பது வயதாகிறது. பத்து ஆண்டுகளாகப் பார்லிமெண்டு அங்கத்தினர் பதவி வகிக்கிருர். ஒரு முறை நிதி மந்திரியாகவும் இருந்தார். பார்லிமெண்டில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் ஸ்ரீ கெயிட்ஸ்கலுக்கு வருஷத்துக்கு இரண்டாயிரம் பவுன்-சுமார் இருபத்தாருயிரம் ரூபாய் கிடைக்கும்.

### சிங்கப்பூர்

சிங்கப்பூர் பிரிட்டிஷாரின் குடியேற்ற நாடு. இங்கு வாழும் மக்கள் தொகை சுமார் பன்னிரண்டு லட்சம். இப்பொழுது ஒரு வரையறைக்கு உட்பட்ட சுயாட்சிதான் நடைபெறுகிறது. சிங்கப்பூரின் எதிர்காலம் குறித்து ஏப்ரல் மாதத்தில் லண்டனில் வட்ட மேஜை மகாநாடு ஒன்று நடைபெறும். அந்த மகாநாட்டில், 'உள்நாட்டு சுயாட்சி' என்பதன் இலக்கணம், அதனை அமலுக்கு கொண்டு வருவதற்குள்ள தேதி நிர்ணயம், சட்டசபை அமைப்பு, உத்தியோக வர்க்கத்தின் எதிர்காலம், வெளி நாட்டு உறவு, தற்காப்பு முதலிய விஷயங்கள் ஆலோசனைக்கு வரும்.

சிங்கப்பூரில் ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ் ஆகிய மொழிகள் பேசுகின்றனர். இந்த நான்கு மொழிகளையும் சட்டசபை அங்கீகரிக்கும் வகையில் அரசியல் சட்டத்தை திருத்துமாறு சிபார்சு செய்யப்போவதாக, பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரி ஸ்ரீ பாய்ட் கூறினர்.

### ஸ்ரீமதி சன்-யாட்-சென்

சீனப் புரட்சியின் தந்தை டாக்டர் சன்-யாட்-சென்னின் மனைவியும், செஞ்சீனவின் உப ஜனதிபதியுமான ஸ்ரீமதி சன்-யாட்-சென் இந்திய அரசாங்கத்தார் அழைப்பின் மீது, இந்தியாவுக்கு விஜயம் செய்தார். இவரை அழைத்துவர இந்திய அரசாங்கம் பிரத்தியேகமாக விமானம் ஒன்றை சீனவுக்கு அனுப்பியது. ஸ்ரீமதி சன்-யாட்-சென் டில்லி விமான நிலையம் சேர்ந்ததும், இந்தியாவின் உப ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனும், பிரதம மந்திரி நேருவும் மற்றும் பலரும் வரவேற்றனர்.

"நம்மிரு நாடுகளுக்கும் தொன்றுதொட்டு தோழமை உண்டு. அந்த நட்பு சமீப காலத்தில் பெருகி வளர்ந்து

வேரூன்றி விட்டது. ஆசியாவிலும், உலகத்திலும், சமாதானத்தை நிலைநாட்டவும், பாதுகாக்கவும் நமது ஒத்துழைப்பும் ஒற்றுமையும் அவசியமானவை. இந்திய மக்கள் வெற்றி மேல் வெற்றி பெற்று தேசீய ஆக்க வேலைகளில் முன்னேறுவார்களாக" என்று ஸ்ரீமதி சன்-யாட்-சென் கூறினர்.

கோவா பிரச்னையில் சீன இந்தியாவுக்கு முழு ஆதரவு அளிக்கிறது என்றும் ஸ்ரீமதி சன்-யாட்-சென் தெரிவித்தார்.

சூடான் குடியரசு

சூடான் தேசம் பரிபூரண ராஜாங்க உரிமையுள்ள குடியரசாக வேண்டும் என்ற தீர்மானம் சூடான் பார்லிமெண்டில் ஏகமனதாக நிறைவேறியது. ஐம்பத்தாறு ஆண்டுகளுக்குப் பின் சூடானில் பிரிட்டிஷ்-எகிப்து கூட்டு ஆட்சி அகன்றது.

ருஷ்ய-ஆப்கனிஸ்தான் உறவு

இந்தியாவிலிருந்து திரும்பும் வழியில் ருஷ்யப் பிரதமர் புல்கானினும், குருஷ்சேவும் ஆப்கனிஸ்தான் தலைநகரான காபூலில், ஆப்கன் அரசாங்க விருந்தினர்களாகத் தங்கினர்கள்.

ஆப்கன் பிரதம மந்திரியும் ருஷ்யப் பிரதம மந்திரியும் விடுத்த கூட்டறிக்கையில் இரு நாடுகளுக்குமிடையே உள்ள அரசியல், பொருளாதார, கலாசாரத் தொடர்புகளைப் பலப்படுத்த வேண்டுமென்றும், பாண்டுங் மகாநாட்டில் ஏகமனதாகத் தீர்மானிக்கப் பெற்ற பஞ்சசீலக் கொள்கைகள் உலக சமாதானத்தையும், உலக நாடுகளுக்கிடையே பரஸ்பரம் நல்லெண்ணத்தையும் ஏற்படுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

ஆப்கனிஸ்தானத்தில் விவசாய அபிவிருத்தி, ஜல மின்சார நிலையங்கள் அமைத்தல், நீர்ப்பாசன வேலைகள், மோட்டார் பழுது பார்க்கும் தொழிற்சாலைகள், காபூல் விமான நிலையத்தைச் சீர்படுத்துதல் ஆகியவைகளுக்காக, ருஷ்யா ஆப்கனிஸ்தானத்துக்குச் சுமார் ஐம்பது கோடி ரூபாய் கடனாகக் கொடுக்கும் என்றும் கூட்டறிக்கை கூறுகிறது.

பிஜித் தீவு

பசிபிக் சமுத்திரத்தில், பிரிட்டிஷார் வசமுள்ள பிஜித் தீவை, பிரிட்டன், நியூஸிலாந்து அல்லது இந்தியாவுடன் இணைப்பது சாத்தியமா என்பதை ஆலோசிக்குமாறு பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஸ்ரீ வில்லியம் டீலிங் யோசனை கூறினார். இந்த யோசனையை ஏற்க முடியாது என்று பிரிட்டன் குடியேற்ற நாட்டு மந்திரி ஸ்ரீ பாய்ட் கூறினார். பிஜித் தீவின் மொத்த ஜனத்தொகை சுமார் மூன்று லட்சம். இதில் பாதிக்கு மேற்பட்ட தொகையினர் இந்தியர்.

அமெரிக்க உதவி

இந்தியாவுக்கு இந்த ஆண்டில் அமெரிக்காவிடமிருந்து சுமார் முப்பத்தைந்து கோடி ரூபாய் பொருளாதார உதவியும், சுமார் ஐந்து கோடி ரூபாய் மதிப்புள்ள தொழில் நுணுக்க உதவியும் கிடைக்கும். அமெரிக்கா வெளிநாடுகளுக்குச் செய்து வரும் உதவித் தொகை தினந்தோறும் சராசரி இரண்டரைக்கோடி ரூபாய் ஆகும்.

பாக்கிஸ்தான்

பாக்கிஸ்தானின் அரசியல் திட்ட நகல் பிரசுரமாகியிருக்கிறது. அதன்படி பாக்கிஸ்தானில் மத்திய பார்லிமெண்டில் முந்நூறு அங்கத்தினர்கள் கொண்ட ஒரே சபைதான் இருக்கும். பாக்கிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு என அழைக்கப்பெறும்.

இக்குடியரசில் ஒரு முஸ்லிம் தான் ராஜாங்கத் தலைவராக இருக்க முடியும். இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு முரணான எந்தச் சட்டங்களையும் இயற்ற முடியாது. இஸ்லாமியக் கோட்பாடுகளை வரையறுக்க ஒரு கமிஷன் நியமிக்கப் பெறும்.

மத்திய பார்லிமெண்டில் மேற்கு பாக்கிஸ்தானுக்கும் கிழக்கு பாக்கிஸ்தானுக்கும் சமமான பிரதிநிதித்வம் உண்டு.

அரசியல் திட்டம் அமலுக்கு வந்து இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் உருதுவும் வங்காளியும் அரசாங்க மொழிகளாக இருக்கும். அது வரையில் ஆங்கிலம் அரசாங்க மொழியாகத் தொடர்ந்து நீடிக்கும்.

'பறக்கும் சைகிள்'

அமெரிக்காவில் புதிதாக பறக்கும் சைகிளைக் கண்டு பிடித்திருக்கின்றனர். விமானம் ஓட்டத் திறமையில்லாதவர் கூட இந்த சைகிளை ஓட்டுவதற்கு இருபது நிமிஷப் பயிற்சி பெற்ருல் போதுமாம். முந்நூறு ராத்தல் எடையை, மணிக்கு அறுபத்தைந்து மைல் வேகத்தில் இந்த சைகிள் பறந்து எடுத்துச் செல்லும். ஆனால் ஒரே சமயத்தில் நூற்றைம்பது மைல் தூரம் வரைதான் இது பறக்கும். தற்பொழுது இம்மாதிரி பறக்கும் சைகிள் பன்னிரண்டு உற்பத்தி செய்திருக்கின்றனர். அமெரிக்க ராணுவப் படையினர் இவைகளை உபயோகிக்கின்றனர்.

'அஜ்கமனேல்'

இல்லாததை இருப்பதாகவும், கேளாததைக் கேட்பதாகவும் கூறும் அரைப் பைத்தியத்தைக் குணமாக்க, அமெரிக்க டாக்டர் பிராக்டர் என்பவர் 'அஜ்கமனேல்' என்னும் மருந்தைக் கண்டு பிடித்திருக்கிருராம். முப்பத்து

நான்கு அரைப் பைத்தியக்காரர்களுக்கு இந்த மருந்தைக் கொடுத்ததில், இருபத்தொன்பது பேர் குணமடைந்திருக்கிறார்களாம். குடிபோதையால் நிலை தவறி பிரமை அடைந்து கண்டபடி உளற ஆரம்பித்த இருபது பேர்களுக்கு இந்த மருந்தைக் கொடுத்ததில், பதினாறு பேர் சில மணி நேரத்தில் சுய உணர்வு பெற்றார்களாம். பிரமை ஏற்படுத்தும் நரம்புகளை வேலை செய்யாமல் தடுக்கும் சக்தி இந்த மருந்துக்கு உண்டு என்று டாக்டர் பிராக்டர் கூறினார்.

புது நூற்பு இயந்திரம்

கையினாலும், மின்சாரத்தினாலும் இயக்கக் கூடிய புதிய நூற்பு இயந்திரம் ஒன்றை, பரோடா துணி உற்பத்தி ஆராய்ச்சி ஸ்தாபனம் கண்டு பிடித்திருக்கிறது. இந்த இயந்திரத்தின் நீளம் மூன்று அடி; அகலம் இரண்டரை அடி; உயரம் நாலரை அடி. தையல் இயந்திரத்தை இயக்குவது போல இதையும் காலினால் இயக்கலாம். மின்சாரத்தின் மூலம் இயக்குவதாக இருந்தால், அதற்கு ஒரு சிறிய மோட்டாரை இணைக்க வேண்டும்.

குடிசைத் தொழில் மூலம், உயர்ந்தபட்ச அளவு நூல் உற்பத்தி செய்ய இது பயன்படுமென்று கருதுகிறார்கள். இந்த இயந்திரங்களை விரைவில் பெருத்த அளவில் உற்பத்தி செய்து நாடெங்கும் விற்பனைக்கு அனுப்புவார்கள்.

மின்சார வசதி

இந்தியாவில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் இருபது ஆண்டுகளுக்குள் மின்சார வசதி செய்ய இந்திய அரசாங்கத்தார் நீண்ட காலத் திட்டமொன்றைத் தயாரிக்கின்றனர். முதலாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் மின்சார வசதி பெறும் கிராமங்களின் தொகை ஆறாயிரத்துஐந்நூறு

நியாய வார மசோதா

நியாய வாரம், குத்தகைபற்றி சென்னை அரசாங்கம் ஒரு மசோதாவைப் பிரசுரித்திருக்கிறது. அதன்படி சாகு படிச் செலவு குடியானவருடையது. மகசூலில் நிலக்கார ருடைய பங்கு நாற்பது சத விகிதம். அரசாங்கத்துக்குக் கொடுக்க வேண்டிய வரிகளை நிலக்காரர் கொடுக்க வேண்டும்.

விவசாயச் செலவு என்பது விதை, உழவடை, எரு, அறுவடை, அடித்தல் என்பவை. வைக்கோல் குடியான வருடையது.

தண்ணீர்க் கூலி, பழுது பார்ப்பது உள்பட மாமூல் செலவுகள் நிலக்காரருடையது.

உளுந்து, பயறு போன்ற சிறு பயிர்கள் வாரக் கணக் கில் வரமாட்டா.

மலையாளம், தென் கன்னடம் நீங்கலாக சென்னை ராஜ்யம் முழுவதிலும் இச்சட்டம் 1956-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதி முதல் அமலுக்கு வரும்.

சர்க்கரை ஆலைகள்

தேசம் முழுவதிலும் புதிதாக நாற்பது சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்த இந்திய அரசாங்கத்தார் லைசென்ஸ் வழங்கி யிருக்கிறார்கள். தற்பொழுது இந்தியாவில் வரு ஷத்தில் பதினறு லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி யாகிறது. புதிய ஆலைகள் வேலை தொடங்கினல் இன் னும் ஆறு லட்சம் டன் சர்க்கரை அதிகமாக உற்பத்தி யாகும். சர்க்கரையின் விலை குறையும். அதன் பயனுக மக்கள் அதிகமாகச் சர்க்கரையை உபயோகிக்க ஆரம்பிப் பார்கள். சென்ற வருஷம் மக்கள் பதினேழு லட்சம் டன் சர்க்கரை உபயோகித்தார்கள். 1960-ம் ஆண்டில் மக்கள்

இருபத்திரண்டரை லட்சம் டன் சர்க்கரை உபயோகிப் பார்கள் என்று எதிர்பார்க்கிறோம் என இந்திய அரசாங்க மந்திரி ஸ்ரீ அஜித் பிரசாத் ஜெயின் கூறினர்.

புதுவைத் துறைமுகம்

புதுச்சேரியில் புதிதாக ஒரு துறைமுகம் கட்டுவது சம்பந்தமான அமைப்புக்கள் உருவாகிக் கொண்டிருக்கின் றன. புதிய துறைமுகத்தைக் கட்டுவதற்குச் சுமார் இருபத்தொன்பது லட்ச ரூபாய் செலவாகும்.

அகதிகள்

ஒவ்வொரு மாதமும் கிழக்கு வங்காளத்திலிருந்து இருபது அல்லது இருபத்தையாயிரம் அகதிகள் இந்தியா வுக்கு வருவது கவலைப்படத் தக்கது என்று காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ தேபர் தெரிவித்தார்.

ஆராய்ச்சி நிலையங்கள்

இரண்டாவது ஐந்தாண்டு காலத் திட்டத்தில் ஐந்து புதிய ஆராய்ச்சி நிலையங்கள் ஏற்படும். அவை: சுரங்க ஆராய்ச்சி நிலையம், மெக்கானிகல் என்ஜினீரிங் நிலையம், ஜீவ சாஸ்திர ஆராய்ச்சி நிலையம், பாலைவன ஆராய்ச்சி நிலையம், பூமி சாஸ்திர ஆராய்ச்சி நிலையம்.

எம். என். ராய் நூல்கள்

காலஞ் சென்ற எம். என். ராய் எழுதிய, இதுவரை வெளிவராத 'தற்கால விஞ்ஞானத்தின் வேதாந்த விளை வுகள்' என்ற நூலை, ஒன்பது தொகுதிகளாக வெளியிட வங்க முதன் மந்திரி ஸ்ரீ பி. ஸி. சென் ஏற்பாடு செய்திருக் கிருர். இம் முயற்சிக்கு ஸ்ரீ நேரு ஐயாயிரம் ரூபாய் நன் கொடை யளித்திருக்கிருர்

இந்தப் புதிய நூல், கார்ல் மார்க்ஸ் காலத்துக்குப் பிறகு இன்றுவரை ஏற்பட்டுள்ள சிந்தனைப் போக்கைப் பிரதிபலிக்கும் என்று தெரிகிறது.

ஸ்ரீ ராய் எழுதிய நூல்களில் சில ருஷ்ய, ஸ்பானிய, ஜெர்மன் மொழிகளில் மொழி பெயர்க்கப் பெற்று வெளியிடப் பெற்றுள்ளன.

### அரசாங்க மொழி

அரசாங்க மொழிக் கமிஷன் தலைவர் ஸ்ரீ பி. ஜி. கெர் முன்னிலையில், அரசாங்க மொழி சம்பந்தமாக ராஜாஜி உள்பட பலர் சென்னையில் சாட்சியம் கொடுத்தனர். ராஜாஜி தமது சாட்சியத்தில், ஆங்கிலம் போல ஹிந்தியில் திறமை வந்த பிறகே, ஹிந்தியை அரசாங்க மொழியாக்க வேண்டும் என்றும், முதலில் செகண்டரி பள்ளிகளில் கட்டாய ஹிந்தி போதனை வேண்டும் என்றும், அதன்பின் இருபது வருஷ காலம் கழித்தே ஹிந்தி அரசாங்க மொழியாகலாம் என்றும்,ஆங்கிலத்தைக் கைவிட்டு விட வேண்டியதில்லை என்றும் கூறினர்.

### தென்னிந்தியாவில் மில்கள்

தற்போது தென்னிந்தியாவில் இருபத்தொன்பது லட்சம் கதிர்கள் கொண்ட நூற்றுப்பத்து நூற்பு மில்கள் இருக்கின்றன. அடுத்த இரண்டு வருஷங்களில் ஏழு லட்சம் கதிர்களுடன் ஐம்பத்தெட்டு புதிய மில்கள் ஏற்படும். இதனுல் மேலும் பதினேழாயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் என்று இந்திய அரசாங்க அதிகாரி ஒருவர் கூறினர்.

### விசேஷ ஸ்டாம்புகள்

வீரர்களின் நூற்ருண்டு விழாவை முன்னிட்டு இந்திய அரசாங்கம் விசேஷ ஸ்டாம்புகளை வெளியிடும். அவற்றில் தமிழ் நாட்டு வீரர்களின் படங்களும் இடம் பெறும்.

கோவா

"தாய் நாடாகிய பாரதமாதா, தன் குழந்தையைத் திரும்பி வருமாறு அழைக்கிருள்; குழந்தை தாயின் குரலைப் புரிந்து கொண்டு, வருவதாகப் பதில் சொல்லுகிறது. பாரத மாதாவின் கடத்திச் செல்லப்பட்ட குழந்தை கோவா. ஜனநாயகத்தை முன்னிட்டு, கோவாவை இந்திய அரசாங்கத்துக்குப் பூதானமாகக் கொடுத்துவிடும்படி போர்த்துகல்லுக்கு யோசனை கூறுகிறேன்" என்று ஈ. டிமூல்டர் என்னும் கிறிஸ்தவப் பாதிரியார் பம்பாயில் கூறினர்.

உலக நாடுகளில் வைத்தியர்கள்

உலகத்தில் தற்பொழுது தகுதி பெற்ற வைத்தியர்கள் ஒரு லட்சம் பேர் இருக்கின்றனர்.

எண்பத்தைந்து நாடுகளில் ஐந்நூற்றுத் தொண்ணூற்றைந்து பேர் வைத்தியப் பள்ளிகளில் இருக்கின்றனர்.

பதினன்கு நாடுகளில், ஆயிரம் பேருக்கு ஒரு வைத்தியர் இருக்கிருர். இருபத்திரண்டு நாடுகளில், இருபதாயிரம் பேருக்கு ஒரு வைத்தியர் இருக்கிருர்,

இந்தியாவின் முப்பத்தேழு கோடி ஜனத்தொகைக்கு முப்பத்தேழு வைத்தியப் பள்ளிகள் இருக்கின்றன.

# மடகாஸ்கர்

எஸ். ஸி. தியாகராஜன்

எனது தந்தையாரும் நானும் கென்யாவின் தலை நகரான நைரோபியிலிருந்து, மடகாஸ்கர் தீவுக்கு விமானத்தில் சென்றோம். விமானம் காலை ஒன்பதரை மணிக்குப் புறப்பட்டது. பத்தரை மணிக்கு கிளிமஞ்சாரோ மலையைப் பார்த்தோம். அதன் உயரம் பத்தொன்பதாயிரம் அடி. அதன் சிகரங்களில் பனி உறைந்திருந்தது.

பிற்பகல் இரண்டு மணிக்கு மடகாஸ்கர் கரை தெரிந்தது. மூன்றேகால் மணிக்கு விமான நிலையத்தில் இறங்கினோம். விமான நிலையத்துக்கும் தலைநகரான டானரிவ் (Tannarive) என்ற நகருக்கும் உள்ள தூரம் ஐம்பது மைல்.

மடகாஸ்கர் தீவின் ஜனத்தொகை சுமார் நாற்பது லட்சம்; அதாவது பம்பாய் நகரின் ஜனத்தொகை தான். மடகாஸ்கரின் நிலப்பரப்பு விசித்திரமாக இருந்தது. எங்கு பார்த்தாலும் மலைப் பிரதேசம். சமுத்திரக் கரை ஓரங்களில் ஒன்றும் பயிரிடவில்லை; ஜனங்கள் நடமாட்டத்தையும் காணோம். மலைகளின் மீது அடர்த்தியான காடுகள் ஏராளமாக இருந்தன. எங்கு பார்த்தாலும் மேடும் பள்ளமும் தான். ஒரு மைல் தூரத்துக்குக்கூட சமமான நிலப்பரப்பைப் பார்ப்பது அரிது. மலைகளுக்கு இடையில் உள்ள பள்ளத்தாக்குகளில் பயிரிடுகின்றனர் முக்கியமாக நெல் விளைகிறது.

டானரிவ் நகர் பீடபூமியில் இருப்பதால், சீதோஷ்ண நிலை உதகமண்டலத்தைப்போல இருந்தது. விமான நிலையத்திலிருந்து டானரிவ் செல்லும் வழியில் உயர்ந்து வளர்ந்த யூகலிப்டஸ் மரங்கள் ஏராளமாக இருந்தன. பூமி செம்மண் பூமி; ஆனால் வழிநெடுக தார் ரோடு. ஆங்காங்கே சில கிராமங்கள் இருந்தன. அங்கே உள்ள வீடுகள் எல்லாம் ஒரு மாடியுள்ள வீடுகள். நீண்ட கொம்புள்ள புஷ்டியான மாடுகளைக் கண்டேன். மடகாஸ்கர் மாடுகளுக்கும் காங்கேயம் மாடுகளுக்கும் வித்தியாசமே இருக்காது.

மடகாஸ்கர் தீவிலுள்ள மக்களுக்கு மல்காஷ் என்று பெயர். இவர்கள் குள்ளமானவர்கள். ஐந்தடி உயரத்துக்கு மேல் இல்லை. இவர்களுடைய சரீரம் புஷ்டியானது. மூக்கு சப்பை. இவர்கள் மலேயாவிலிருந்து குடியேறியதாகத் தெரிகிறது.

மல்காஷ் பெண்களின் உடை ஒரு பாவாடை; ஒரு அரைக்கை சட்டை; மேலே போர்த்திக்கொள்ள ஒரு துண்டு; அவ்வளவுதான். கல்யாணமான பெண்கள் காலில் செருப்பு அணிவார்கள்; கல்யாணமாகாதவர்கள் செருப்பு அணியக் கூடாது. மல்காஷ் மக்களிலே, கறுப்பு நிறமுள்ளவர்களைக் காண்பது அரிது.

மல்காஷ் மக்களிலே இரண்டு பிரிவு. ஒன்று சுருட்டை மயிர் உள்ளவர்கள்; மற்றொன்று சுருள் இல்லாமல் நேரான மயிர் உள்ளவர்கள். ஒவ்வொரு பிரிவினரும் தங்களுக்குள்ளே தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்.

டானரிவ் என்பது, ரோமாபுரி போல ஏழு குன்றுகள் உள்ள நகரம். மல்காஷ் மொழியில் டானரிவ் என்றால் ஏழு குன்றுகள் என்று அர்த்தம்.

மல்காஷ் மொழிக்குத் தனி எழுத்து-லிபி-கிடையாது. ரோமன் எழுத்துக்கள் தான். மல்காஷ் பெயர்கள் எல்லாம் ரா என்ற எழுத்தில் ஆரம்பமாகின்றன.

மடகாஸ்கரில் உள்ள நீக்ரோக்கள் தொகை மிகக் குறைவு. இந்தியர்கள் சிலரும் குடியேறியுள்ளனர். இவர்களில் சிலர் 1895-ம் வருஷத்தில் குடியேறினர்.

டானரிவ் நகரில் ராணி மாளிகையிலுள்ள பொருட்காட்சிசாலையைப் பார்த்தோம். அங்கே அண்டரண்டப் பட்சியையும் அதன் முட்டையையும் பார்த்தோம். பழங்காலத்தில் மடகாஸ்கரை ஆண்ட அரச குடும்பத்தினரின் சிம்மாசனம், ஆடைகள். ஆபரணங்கள், மற்ற நாடுகளிலிருந்து அரச குடும்பத்தாருக்கு அளித்த பரிசுப் பொருள்கள், முதலியவைகளைப் பொருட்காட்சியில் வைத்திருந்தார்கள். பரிசுப் பொருள்களில் நான்கு தொங்கும் விளக்குகள் இருந்தன. அவற்றில் ஒன்றில் விஷ்ணுவின் வாமன அவதாரத்தின் படமும், மற்றொன்றில் அக்பர் பேபர் முதலிய சக்கரவர்த்திகளின் படங்களும் பொறிக்கப் பெற்றிருந்தன.

அரச குடும்பத்தாரின் அரண்மனைகள் இரண்டு. அவைகளும் பொருட்காட்சிகளே. அக்காலத்தில் ராணிகள் தான் நாட்டை ஆண்டார்களாம். பிரதம மந்திரியாக இருப்பவர் தான் ராணியின் கணவர். ராணிக்குப் பிரதம மந்திரி பிடித்தமில்லா விட்டால், அவரை நீக்கி விட்டு வேறொருவரை நியமிக்கலாமாம். அரண்மனை இரண்டுக்குள்ள மரக்கட்டிடம். தற்பொழுதுள்ள பிரெஞ்ச் அரசாங்கத்தார், மரக்கட்டிடத்தைச் சுற்றிலும் கல்லால் சுவர் எழுப்பி பழைய மரக்கட்டிடத்தைப் பாதுகாக்கிறார்கள்.

முதன் முதலாக மடகாஸ்கரை ஆண்ட ராணியின் பெயர் ரதாமா. அவர் புருஷன் பெயர் ரக்கோட்டா. அவர்கள் 1786 முதல் 1810-ஆம் வருஷம் வரையில் ஆட்சி

செய்தார்கள். மூன்றுவது ரதாமா ராணி, 1895-ம் வருஷத்தில் நாட்டை பிரெஞ்சுக்காரரிடம் ஒப்படைத்தார்.

டானரிவ் நகரிலிருந்து மஜீங்காவுக்கு சிறு ராணுவ விமானம் ஒன்றில் சென்றேம். விமானத்தில் ஆசனங்கள் சிறிதும் வசதியில்லாதவை. இரண்டு மணி நேரத்தில் மஜீங்காவை அடைந்தோம்.

மஜீங்காவில் பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. மாலையில் துறைமுகம் சென்றேம்; அங்கே பெரிய மரம் ஒன்றைப் பார்த்தேன். அதன் பெயர் போவா போவா (Boa Boa tree) என்பது. இதன் அடிமரம் பெரிது. இந்த உயரமான மரத்தில் ஏராளமான சிறு கிளைகள் இருந்தன. இது ஒரு வகைப் பழம் தருகிறதாம். இதன் கொட்டைகளிலிருந்து ஒரு வகை எண்ணெய் இறக்குவதாகக் கூறினுர்கள்.

மஜீங்காவில் இந்தியர் ஒருவர் அன்புடன் உணவளித்தார். மைசூர் பாக், ஜிலேபி, போண்டா, முதலியவைகளைப் பரிமாறினுர்கள்.

மஜீங்காவிலிருந்து விமானத்தில் மீண்டும் டானரிவ் சென்றேம்; அங்கிருந்து நாற்பது மைல் தூரத்திலுள்ள ஒரு குகைக்குச் சென்று திரும்பினேம்.

டானரிவ் நகரில் இந்திய நண்பர் ஒருவரின் வியாபார நிலையத்துக்குச் சென்றேம். கடையின் முன்னுல், 'தச்சு வேலை செய்ய இருவர் தேவை' என்ற விளம்பரப் பலகையைப் பார்த்தோம். அந்தப் பலகையை மாட்டி, ஒரு மாதமாகியும் ஆட்கள் யாரும் வரவில்லையாம். நமது நாட்டில் 'வேலை காலி இல்லை' என்ற பலகைகளைப் பார்த்த எங்களுக்கு இது ஆச்சரியமாக இருந்தது.

மடகாஸ்கரில் ஜனத்தொகை குறைவு. வேலைக்கு ஆள் கிடைப்பது கஷ்டம். ஏராளமாக நிலம் இருக்கிறது. ஆனால் விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய அளவு மட்டுமே பயிர் செய்கிறார்கள். பெரும்பாலும் நெல் பயிர் தான். இந்தியர் சிலர் மிளகு, பருப்பு முதலியன பயிரிடுகிறார்கள்.

மடகாஸ்கரில் இல்லாதவை இரண்டு. ஒன்று வேலையில்லாத் திண்டாட்டம்; மற்றொன்று பிச்சைக் காரர்கள்.

# நந்திகொண்டா அணை

கிருஷ்ணா நதியும், அதன் வடிநிலப் பகுதிகளும் பல ராஜ்யங்களால் பங்கு கொள்ளப்பட்டிருப்பவையாகும். இந்தியாவில் அதிகமான பல ராஜ்யங்கள் பங்குகோரும் நதி மார்க்கமும் இதுதான். இந்த நதியோ இதன் உப நதிகளோ அல்லது இதன் வடிகால் நிலப்பரப்புகளோ ஏதோ ஒன்று, பம்பாய், மைசூர், ஹைதராபாத், ஆந்திரா ஆகிய நான்கு ராஜ்யங்களில் ஒன்றில் இருக்கின்றன; அல்லது ஓடிவருகின்றன. இந்நதி பம்பாய் ராஜ்யத்தில் மேற்கு மலைத்தொடரில் ஒரு சிறு ஆலயத்திலுள்ள காம தேனு சிலையின் வாயிலிருந்து உதயமாகிறது. இந்தச் சிறு நீர்த்தாரையை இங்கே பார்ப்பவர்கள் இங்கேயே தடைப்படாது மாபெரும் கிருஷ்ணா நதியாக உரு வெடுத்து 775 மைல்கள் ஓடி, பின்னர் வங்காளக் குடாக் கடலில் விழும் என்று யூகிக்கவே முடியாது. ஆனால் முடி வில்லாது ஓடுவதுபோல் தோன்றும் இந்நதியின் இரு பக்கங்களிலும் பரந்துகிடக்கும் சுமார் 97,000 சதுரமைல் விஸ்தீர்ண வடிகால் பரப்பு தென்மேற்குப் பருவ மழை யால் கிடைக்கும் தண்ணீரை, கடப்பிரபா, மலப்பிரபா, துங்கபத்திரா, மூசி போன்ற பல உப நதிகளின் மூலம் கிருஷ்ணா நதியில் கொண்டு சேர்க்கின்றன. கிருஷ்ணா நதியின் ஆரம்பமும், அதன் உப நதிகளும் அக்ஷரேகை யிலிருந்து ஆறு டிகிரிப் பரப்புக்கு மேல் பரவியிருப்ப துடன், மேற்குத் தொடர்ச்சி மலைகளின் கிழக்குச் சரிவு களில் ஓடி, வடக்கே கோதாவரியை ஒட்டியும்,

பெண்ணாற்றை நெருங்கியும் தெற்கே காவிரி நதி ஆரம்பத்தை அணுகியும் விசாலமாகப் பரவிக் கிடக்கின்றன.

தண்ணீருக்குத் தன் உப நதிகளை நம்பியிருக்கும் கிருஷ்ண நதி சரியான 'மழை கால' ஆறு; இதில் மழை காலத்தில் பெருவெள்ளம் கட்டுக்கடங்காது ஓடும்; வருஷத்தில் எட்டு மாதங்களில் தண்ணீர் வரவரக் குறைந்து சில சமயம் மணல் மயமாகக்கூட இருக்கும். வருஷத்தில் அதிக அளவு தண்ணீர் ஓட்டம், அதாவது விஞடிக்கு 10 லக்ஷம் கன அடி ஓட்டம் விஜயவாடாவில் உச்ச வெள்ளப் பெருக்கு சமயங்களில் ஜூன் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையுள்ள காலத்தில் இருந்துவரும். இது நைல் அல்லது காவேரி நதி உச்ச அளவு நீரோட்டத்தைப்போல் இரு மடங்காகும். அக்டோபருக்குப் பின் தண்ணீர் மடமடவென்று குறைந்து ஜனவரி முடிவில் கால்வாயின் தலை மதகுகள் திறந்து வைக்கப்பட்டிருந்தால் விஜயவாடா அணைக்கட்டை மிஞ்சி தண்ணீர் வழிந்தோடுவது கிடையாது.

கிருஷ்ணவும், அதன் உப நதிகளும் பெரும்பாலும் உறுதியாகத் தண்ணீர் கிடைக்காதெனப் பொதுவாகக் கருதப்படும் வளமிகுந்த நிலப்பிரதேசத்தில்தான்ஓடுகின்றன; ஆகையினால் மழை பெய்யும் காலத்தில் இவற்றின் நீரைத் தேக்கி வைத்தால் கிருஷ்ண நதிப் பள்ளத்தாக்கிலுள்ள பெல்காம், சித்தலதுர்க்கம், ரெய்ச்சூர், கும்பர்கா, பெல்லாரி, கர்னூல், குண்டூர் போன்ற அரைகுறை வறட்சியான ஜில்லாக்களுக்கு நன்மை கிடைக்கும்; இதில் வரும் பருவ மழை வெள்ளம் நலகொண்டா ஜில்லா பூராவும் நான்கு அடி ஆழத்துக்குத் தண்ணீர் நிற்கக்கூடிய அவ்வளவு அதிகமாகும்.

இந்த ஜில்லாக்களில் பல சாதாரணமாக சரிவரப் பெய்யாத மழையை எதிர்நோக்கியிருக்க வேண்டியிருப்ப

தால் இப்பிரதேசங்களில் அடிக்கடி பஞ்சம் ஏற்படுகிறது; பஞ்ச நிவாரண வேலைகள் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றன.

முந்திய முயற்சிகள்

இந்தியாவின் தென் பகுதியில் உள்ள நதிகளில் இரண்டாவது பெரிய நதியான கிருஷ்ணுவின் நீரோட்டத்தைத் தேக்கிப் பயன்படுத்தும் முதல் நடவடிக்கை நீர்ப்பாசன எஞ்சினியரிங் துறையில் வழிகாட்டியாக இருந்த ஸர் ஆர்தர் காட்டனுல் எடுக்கப்பட்டது. 1852-55-ம் ஆண்டுகளில் விஜயவாடாவுக்கு அருகில் ஆற்றில் ஒரு அணை கட்டப்பட்டது. இந்த அணைக்கட்டின் தண்ணீர் மூலம் முதன் முதலில் 1890-ஆம் வருஷம் 50,000 ஏக்கராவில் சாகுபடி செய்யப்பட்டது; இப்பொழுது சாகுபடி விஸ்தீரணம் இதைப்போல் 22 மடங்கு அதிகரித்திருக்கிறது. இருந்த போதிலும் பாசனத்துக்காக அதிகத் தண்ணீர் இன்னும் தேவையாகவே இருந்து வருகிறது. கிருஷ்ணுவின் உபநதியான துங்கபத்திரா மீது ஒரு அணையும், கிருஷ்ணுவின் கீழ்ப்பகுதியில் புலிச்சித்தலாவுக்குச் சமீபத்தில் ஒரு நீர்த்தேக்கமும் கட்டப்பட வேண்டுமென்று நீர்ப்பாசனக் கமிஷன் (1901-2) சிபாரிசு செய்தது. துங்கபத்திரா நீர்த்தேக்கம் சமீபத்தில் தான் கட்டி முடிக்கப்பட்டது.

இந்த நதி ஒரு ராஜ்யத்துக்கு மேற்பட்ட ராஜ்யங்களில் ஓடுவதால், இதன் தண்ணீரை மைசூர், ஹைதராபாத், பம்பாய், ஆந்திர ராஜ்யங்கள் பகிர்ந்து கொள்வதற்கான உடன்பாட்டுக்குத் திட்டக் கமிஷன் ஏற்பாடு செய்தது. சென்னை ராஜ்ய சர்க்கார் 1951-ம் ஆண்டில் (ஆந்திர ராஜ்யம் ஏற்படுவதற்கு முன்னர்) இந்த நதியின் ஜலத்தைப் பயன்படுத்துவதற்கான ஒரு ஆலோசனையைச்

சமர்ப்பித்தனர். இத்திட்டத்தின் பெயர் கிருஷ்ணு-பெண்ணுறுத் திட்டமென்பதாகும்; இதன்படி கர்னூலுக்கருகே சித்தேஸ்வரத்தில் கிருஷ்ணு நதியில் நீர்த்தேக்கம் அமைக்கப்படும்; இது பெண்ணுற்றில் கட்டப்படும் ஒரு தேக்கத்துடன் ஒரு கால்வாய் மூலம் இணைக்கப்படும். ஹைதராபாத் பகுதியில் உள்ள நிலங்களின் நீர்ப்பாசனத்துக்காக நலகொண்டா ஜில்லாவில் நந்திகொண்டா கிராமத்தில் கிருஷ்ணு நதி மீது ஒரு அணை கட்டவும், அதன் இடது கரையிலிருந்து ஒரு கால்வாய் வெட்டுவதற்குமான திட்டமொன்றை ஹைதராபாத் சர்க்கார் சமர்ப்பித்தனர். இந்தத் திட்டங்களைப் பரிசீலனை செய்த கோஸ்லா கமிட்டி, நந்திகொண்டாவிலும், கீழகிருஷ்ணுவில் புலிசித்தலாவிலும் இரு அணைகள் கட்டப்பட வேண்டுமென்றும், சென்னை சர்க்காரின் திட்டத்தில் கூறப்பட்டிருந்ததைவிட குறைவான அளவுள்ள ஒரு அணை சித்தேஸ்வரத்தில் கட்டப்பட வேண்டுமென்றும் சிபாரிசு செய்தது.

கோஸ்லா கமிட்டியின் அறிக்கைக்கேற்பத் திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டியதிருந்தது. ஆந்திர ராஜ்யப் பிரிவினைக்குப் பிற்பாடு நந்திகொண்டா திட்டத்தைப் பற்றி ஹைதராபாத் சர்க்காரும், ஆந்திர சர்க்காரும் ஒரு கூட்டு அறிக்கையைத் தயாரித்தனர். இத்திட்டத்தின் முதற்கட்ட வேலையை மேற்கொள்வதற்கான அங்கீகாரத்தை திட்டக் கமிஷன் 1955-ம் வருஷம் பிப்ரவரி மாதம் அளித்தது.

### திட்ட விவரம்

இப்போதைய திட்டத்தின்படி சித்தேஸ்வரத்துக்குக் கீழ்புரம் சுமார் 90 மைல்களுக்கப்பால் நந்திகொண்டாவுக் கருகில் கிருஷ்ணு நதி மீது ஒரு கட்டுமான அணை கட்டப்

படும்; இந்த நீர்த்தேக்கத்திலிருந்து இடது கால்வாய், வலது கால்வாய் என இரு கால்வாய்கள் வெட்டப்படும்.

அணை சுமார் 302 அடி உயரமிருக்கும்; இதன் நீளம் நதிக்குக் குறுக்கே 4,500 அடியிருக்கும். இவ்வணைப் பிரதேசத்தில் பல அனுகூலங்களிருக்கின்றன. அஸ்திவாரக் கல் கடினமான கருங்கல்லாக இருப்பதால் மிகவும் சிறந்ததாகும். இவ்விடத்துக்கு ஹைதராபாத், ஆந்திரா ஆகிய இரு பகுதிகளிலிருந்தும் இலகுவாக வரலாம். இந்த அணை கட்டப்படும் இடம் குண்டூர் ஜில்லாவில் மச்சேர்லா ரயில்வே ஸ்டேஷனிலிருந்து சுமார் 10 மைல் தூரத்திலுள்ளது. வடக்கே கிருஷ்ணுவுக்கும் கோதாவரிக்குமிடையேயுள்ள பெரும்பகுதிப் பிரதேசமும், தெற்கே கிருஷ்ணுவுக்கும் பெண்ணுற்றுக்கும் மத்தியிலுள்ள பிரதேசமும் இந்த நீர்த்தேக்கத்தினுல் பயனடையக்கூடும். நீர்த்தேக்கம் அமைக்கப்படுவதால் மூழ்கிவிடும் நிலம் பெரும்பகுதி தரிசு நிலங்களாகவே இருக்குமாதலால் நஷ்டஈட்டுச் செலவும் அதிகமாக இராது.

இந்த நீர்த்தேக்கம் ஆந்திர தேசத்தில் பிரசித்தி பெற்ற பண்டைய புத்த கலாச்சார சின்னங்களாக விளங்கும் நாகார்ஜுனகொண்டா கற்கட்டிடங்களை மூழ்கடித்துவிடும். எனவே இச்சின்னங்களைப் பத்திரமாகப் பாதுகாத்து வைப்பதற்காக இவைகளை வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

கால்வாய்கள்

140 மைல் நீளமுள்ள வலதுகரைக் கால்வாய் முதற்கட்டத்தில் விநாடிக்கு 14,000 கன அடி நீரோட்டமுள்ளதாக இருக்கும். இது பஞ்சாபிலுள்ள பிரதான பக்ரா கால்வாய் அளவு கிட்டத்தட்ட ஆகும்; இக்கால்வாய் கிருஷ்ணுவின்

உபநதியான நிம்மவாகுக்கு ஈடாக இருக்கும். இக்கால்வாய் முழுதும் ஆந்திர ராஜ்யத்தில் ஓடும்.

இடதுகரைக் கால்வாய் 108 மைல் நீளமிருக்கும்; இது முனேறு நதி வரை போகும். இப்பொழுதுள்ள கட்டத்தில் இது ஹைதராபாத் பகுதியில் ஓடுகிறது.

செலவும் பலனும்

திட்டத்தின் முதற்கட்டத்தை முடிப்பதற்கு அதாவது அணையைக் கட்டி, இரு கால்வாய்களையும் வெட்டுவதற்கு, சுமார் ரூ. 75 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இரு கால்வாய்களிலும் ஓடிவரும் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ளும் அளவுக்கேற்ப, அணை கட்டுவதற்காக ஆகும் செலவு ஆந்திர, ஹைதராபாத் சர்க்கார்களால் பகிர்ந்து மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் முதற்கட்டம் பூர்த்தி செய்யப்படும்போது ஆந்திர ராஜ்யத்தில் குண்டூர், கர்னூல், நெல்லூர் ஜில்லாக்களிலும், ஹைதராபாத் ராஜ்யத்தில் வாரங்கல், நலகொண்டா ஜில்லாக்களிலும் பரவிக்கிடக்கும் சுமார் 20 லக்ஷம் ஏக்கரா நிலத்துக்கு நீர்ப்பாசனம் கிடைக்கும்.

இது தவிர, இத்திட்டத்தை விஸ்தரித்து பாசன வசதி அதிகமான இடங்களுக்குக் கிடைக்கும்படி செய்யவும், பெரிய அளவில் ஜல-மின்சார உற்பத்தி செய்யவும் தோதுக்களிருக்கின்றன.

# ஸ்ரீ நிகேதன்

பிச்சனூர் ஈசுவரமூர்த்தி

தாகுரைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ள அனைவருக்கும் சாந்தி நிகேதன் என்ற சர்வகலாசாலையைப் பற்றிய சேதிகள் தெரியும். இங்கு சமயம், நடனம், சங்கீதம் முதலிய கலைகள் மிகவும் முக்கியமான அம்சங்களாக இடம் பெற்றிருப்பதும், இந்நிலையம் உலகுக்கே இந்தியாவின் நாகரிகத்தை அறிவிக்கும் ஸ்தாபனமாக இயங்கி வருவதும் எல்லோரும் அறிந்ததே. ஆனால் தாகுரை ஒரு கவிஞராகத்தான் பலரும் அறிவார்களே அல்லாமல் அந்தத் தனி மனிதர் தமது வாழ்க்கையை எவ்வாறு இந்த நாட்டுப் பாமர மக்களுக்கும் பயன்பட்டு வருமாறு அமைத்து வாழ்ந்தார் என்ற சேதிகள் தெரிந்திருக்க நியாயம் இல்லை. இந்த நாட்டுக்கு அவர் எடுத்துக் காட்டாக சாந்திநிகேதன் கலாசாலையை அமைத்தார்; என்றாலும் இன்றைய தேவைகள் சாந்திநிகேதன் ஸ்தாபனம் பூர்த்தி செய்யுமா என்பது சந்தேகம்தான். வெறும் ஓவியமும், நடனமும் இன்றைய நமது தேவைகளைப் பரிபூரணமாக்க முடியா. அவை நமது பண்பாட்டின் சின்னங்களாக வேண்டுமாயின் இருந்து வரலாம். ஆனால் வறுமையை வழிபடும் நமது மக்களுக்கு இந்தக் கலைகளின் அவசியம் என்ன ?

ஆனால் தாகுரின் மனம் இந்தியாவின் பழைய பண்பாட்டின் நல்ல அம்சங்களையே எண்ணி இருக்கவில்லை.

தமது கண் முன்னே உள்ள கிராமங்கள் சீரழிந்து வருவதை அவர் கண்டு மனம் வருந்தி இருக்கிறார். அவர்களுடைய தினசரி வாழ்க்கையில் உள்ள கலை உணர்ச்சி மங்கி வருவது பற்றிச் சிந்தித்து இருக்கிறார். இந்த யதார்த்தமான உணர்ச்சிதான் அவரைச் சாந்திநிகேதனுக்கும் மாறுபட்ட ஒரு ஸ்தாபனத்தை அமைக்கப் பெரிதும் காரணமாக இருந்தது. அதன் பயனே ஸ்ரீநிகேதன் ஆகும்.

ஸ்ரீநிகேதன் கிராமியப் பொருளாதார, சமூகப் பண்பாடுகளைச் சீர்படுத்தும் பணிக்காக அமைக்கப்பட்ட மாதிரிக் கிராமம் ஆகும். சாந்திநிகேதனை அடுத்து ஒரு மைல் தொலைவில் அமைந்துள்ளது இக்கிராமம். இதன் இயற் பெயர் சூரல் என்பதாகும். இதைச் சுற்றி உள்ள கிராமங்கள் எல்லாம் மிகவும் பத்தாம்பசலியன. சாந்தால், மூகீஸ் முதலிய பூர்விகக் குடிகள் வாழும் இடங்கள். இக்குடிகளின் மொழிகூட வங்காளி அல்ல. நமது சேரி மக்களைவிட மிகவும் பிற்போக்கானவர்கள். இன்றைய படித்த வங்காள சமூகம் இவர்களைத் தொடத் தகாதவர்கள் என்று மட்டுமல்ல; அதையும் விடக் கேவலமாக ஒதுக்கி வைத்துள்ளது என்பதையும் நாம் இங்கு அறிந்து கொள்ள வேண்டும். இக்குடிகளுக்கும் இன்றைய நமது சமூகத்துக்கும் இடையே உள்ள பிளவு பெரிது; மிகப் பெரியது.

ஸ்ரீநிகேதனைத் தொடங்க உதவியாக இருந்த அமெரிக்க அறிஞர் திரு. லியோனர்டு எல்மிர்ஸ்ட் என்பவர், போன ஆண்டு ஸ்ரீநிகேதன் விழா ஒன்றில் பேசும் போது தாகுரின் சில யோசனைகளைக் கூறினார். 1926–ல் அவர் சாந்திநிகேதனுக்கு வந்தார். அதற்கும் சில நாட்களுக்கு முன் நியூயார்க்கில் அவர் தாகுரைச் சந்தித்த

போது தாகுர் தாம் தொடங்கவிருக்கும் இப்புதிய பணிக்கு திரு. எல்மிர்ஸ்டை அழைத்தார்.

"சாந்திநிகேதனில் நான் அமைத்துள்ள சர்வகலா சாலை ஒரு தனியான கல்விக்கு ஆகும். ஆனால் அதைச் சூழ்ந்துள்ள கிராமங்கள் எல்லாம் நசிந்து கிடக்கின்றன. அவற்றின் பண்பாடு, சமூக வாழ்க்கை, பொருளாதார நிலை எல்லாம் கேவலமாக உள்ளன. இத்தகையதொரு சூழ் நிலையை மாற்றி அமைக்க வேண்டுமானல் புதிய தொரு கல்வி முறை தேவை என்பதை உணர்கிறேன்" என்று தாகுர் கூறி உள்ளார்.

1922-ல் ஸ்ரீநிகேதன் பணி தொடங்கப் பெற்றது. 1924-ல் தாகுர் இங்கு நடத்தப் பெறவிருக்கும் மாற்றங்கள் குறித்து பீகிங்கில் ருஷ்யத் தூதருடன் விவாதித்தார். சமூகங்களிடையே உள்ள பயங்கரமான பாறைகளை ஒழிக்க புரட்சி தேவை என்ற கருத்தை தாகுர் ஒத்துக் கொள்ளவில்லை. அத்தகையதொரு திடீர் மாற்றம் பல தீமைகளை விளைவிக்கும் என்பதை அவர் உணர்ந்தார். எனவே ஸ்ரீநிகேதன் ஊழியர்களின் கடமை கிராம மக்களுடன் கலந்து புதியதொரு மாற்றத்துக்கான சூழ் நிலையை உண்டாக்குவதே என்று வற்புறுத்தினர். இது எத்தகைய தொரு முக்கியமான செயல் என்பது மட்டுமின்றி, எவ்வளவு கடினமான பணிஎன்பதை இக்கிராமங்களை நேரில் அறிந்தவர்கள்தான் உணர முடியும்.

சமீபத்தில்,நாங்கள் அருகே உள்ள ஒரு கிராமத்தில் 'சோஷியல் சர்வீஸ் கேம்ப்' அமைத்து ஒரு வாரம் கிராமங்களை அறிய முயன்ருேம். நாங்கள் சென்றிருந்த ஒரு கிராமத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு ஸ்ரீநிகேதன் ஊழியர் தமது அனுபவத்தைக் கூறினர். அக் கிராம மக்கள் அனைவரும் இஸ்லாமிய மதத்தைத் தழுவி

உள்ளார்கள். முதன் முதலில் ஸ்ரீநிகேதன் ஊழியர் சிலர் அக்கிராமத்துக்குள் சென்றதும் அம் மக்கள் ஒன்று கூடி "இங்கு உள்ளே நீங்கள் வந்தீர்களானல் சரியான தண்டனை கொடுப்போம்" என்று அடித்து விட்டார்கள். நாங்கள் ஊருக்குள் சென்றபோது தெருவில் வந்த பெண் மக்கள் அனைவரும் முகத்தை வேறு பக்கம் திருப்பி நின்று கொண்டனர். நம்மை அவர்கள் இன்றும் வாசற்படி தாண்டி உள்ளேவர அனுமதிப்பதில்லை.

ஆனல் ஸ்ரீநிகேதன் ஊழியரின் இடைவிடாத முயற்சியால் நாம் இன்று எளிதில் அவர்களை அணுக முடிகிறது. அவர்களுடைய துன்பங்களைக் காண முடி கிறது; உணர முடிகிறது. இன்று ஒவ்வொரு கிராமங் களிலும் இளைஞர் சங்கம், முதியோர் சங்கம், பெண்கள் சங்கம் முதலிய இயக்கங்களோடு, இரவுக் கல்வி, பெண் களுக்குத் தையல், பூவேலை முதலிய பொழுது போக்குக் கலைகள் எல்லாம் சேர்க்கப்பட்டுள்ளன. அவர்கள் முகத் தில் துன்பக்களையோடு வெளி உலகின் ஒளியையும் காண முடிகிறது.

ஸ்ரீநிகேதனில் இரு முக்கியமான அம்சங்கள், கிரா மிய உயர்தரக் கல்வி நிலையமும், குடிசைத் தொழில் கல் லூரியும் ஆகும். உயர்தரக் கல்வி நமது கல்வியைப் போல் அல்லாமல் காந்தியக் கல்வியைப்போல் உழைப் பும் ஒரு பகுதியாக அமைக்கப்பட்டுள்ளது. இம்முறையை இக்கல்வி நிலையத்துக்காகவே தனியான முறையில் வகுத் துள்ளார்கள். கிராமங்களிலிருந்து பல மாணவர்கள் இங்கு வந்து பயில இது பெரு வாய்ப்பாக அமைந் துள்ளது.

குடிசைத் தொழில் கல்லூரியில் மரவேலை, காகிதம் செய்தல், நெசவு, தோலினல் அழகுப் பொருள் செய்தல்,

களிமண்ணில் பாண்டங்கள் செய்தல் முதலிய தொழில்கள் கற்பிக்கப்படுகின்றன. நமது கல்லூரியில் உள்ளபடி 'டிப்ளமோ கோர்ஸ்' இங்கு பின்பற்றப்படுகிறது.

மனித உழைப்பைக் கூடிய அளவில் மிச்சப்படுத்தி யந்திர உதவி கொண்டு பல தொழில்களையும் கற்க தாகுர் விரும்பினர். கிராமிய யந்திர வகைகளை அறிந்து வர தாகுர் ஜப்பானுக்கு ஊழியர்களை அனுப்பினர். களிமண்ணில் இங்கு செய்யப்படும் பாண்டங்கள், துணி வகைகள், தோல் சாமான்கள் ஆகியவை இந்தியா நெடுகிலும் பேர்போனவை.

ஸ்ரீநிகேதனில் நடைபெற்று வரும் தொழில்கள் பெரும்பாலும் கிராமங்களிலிருந்து வராமல், இங்கிருந்து கிராமங்களை நோக்கிச் செல்வனவாகவே இருந்தன. ஆகவே இத்தொழில்கள் கிராமிய முறையில் அமைந்திருந்தும், அம்மக்களை நேரடித் தொடர்புக்குக் கொண்டு வரும் முயற்சியால் வெற்றி பெறவில்லை. கிராமங்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் மேலும் பெரிய அளவில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த அரசாங்கத்தார் இப்பணிக்கான அரசாங்க உதவியையும் செய்ய முன் வந்தனர். 1955 தொடக்கத்தில் மேற்கு வங்க சர்க்கார் தேசீய விஸ்திரிப்புத் திட்டத்தில் ஸ்ரீநிகேதனை ஒரு முக்கிய இடமாக அமைத்து இத்திட்டத்தின் விளைவாக கிராம மக்களுக்கு வைத்தியம், விவசாயம் சம்பந்தப்பட்ட துறைகளிலும் உருப்படியான உதவிகள் செய்வது சாத்தியமானது. அத்துடன் 'கம்யூனிட்டி டெவலப்மெண்டு ப்ராஜெக்ட்' நிர்வாகஸ்தர்களும் ஸ்ரீநிகேதனை ஒரு பகுதியாக கொள்வதன் மூலம் தனது திட்டத்தில் உள்ள சமூக பணிகளில் இந்த ஸ்தாபனம் கொண்டுள்ள நல்ல கலை முயற்சிகளைப் பெருவாரியாகப் பின்பற்ற முடியும் என்ற விருப்பத்தைத்

தெரிவித்து இவ்விரு திட்டங்களாலும் ஸ்ரீநிகேதன் தன்னிடத்தே கொண்டுள்ள நல்ல திட்டங்களைச் செயற் படுத்துவதோடு மற்ற கிராமங்களுக்கும் சில சிறந்த அம்சங்களை அளிப்பது சாத்தியமாயிற்று.

கிராமங்கள் தோறும் கூட்டுறவு மருந்து விநியோக நிலையங்கள், பால் பண்ணை, மீன் பண்ணை, நூல் நிலையங்கள், ஆரம்பப் பள்ளிகள் எல்லாம் இப்போது அமைந்து வருகின்றன. கிராமங்களில் நடைபெற்று வரும் நெசவுத் தொழில்கள் ஸ்ரீநிகேதன் பாணியையும் புதிய துறைகளையும் ஏற்று அற்புதமான முறையில் உற்பத்தி செய்கின்றன. இவ்வாறு கிராமங்களில் செய்யப்படும் பொருள்களை நல்லபடியாக விற்பனை செய்ய வேண்டிய கடமையும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டுள்ளது. மேற்கு வங்க கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களும் இத்துறையில் உதவி செய்கின்றன, ஆகவே சீரழிந்து வந்த கிராமிய கைத்தொழில்கள் இன்று கலை உணர்ச்சியும் அழகும் பெற்று சீரடைந்து வருவது சாத்தியமாகி உள்ளது. இந்திய அரசாங்கம் தொடங்கவிருக்கும் கிராம சர்வகலாசாலைகளில் ஸ்ரீநிகேதன் ஒன்ருகும்.

இக்கிராமிய சர்வகலாசாலை, சாந்திநிகேதன் முதலிய கல்வி நிலையங்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளப் பல வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆண்டுக்கு இரு தடவை இங்கு பெருவாரியான முறையில் விழாக்கள் நடைபெறுகின்றன. குடிசைத் தொழில் விழா என்பது இங்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் பொது மக்கள் அனைவரும் கண்டு அனுபவிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒன்ருகும். அன்று எல்லாவித நிகழ்ச்சிகளும் நடைபெறும். இங்கு உற்பத்தியான சாமான்களைக் கொண்டே ஓட்டல், விழாக்கள் எல்லாம் நடத்தப்படுகின்றன. கிராம

மக்களின் விளையாட்டுக்கள், நாடகங்கள் முதலியவற்றேடு சாந்திநிகேதனின் கலை விழாக்களும் இதில் நடைபெறும்.

வங்காளத்தில் அபரிமிதமான முறையில் நிகழும் மேளாக்களில் ஸ்ரீநிகேதன் மேளா ஒன்ருகும். கிராமிய சந்தையே மேளா என்பதாகும். அக்கம்பக்கத்து கிராமங்கள், நகரங்கள் எல்லாம் இச் சந்தையில் கூடுகின்றன. இது அறுவடை முடிந்த காலமாதலால் இவ்விதமான சந்தைகள் இப்பருவத்தில் வெற்றிகரமாக நடைபெற முடிகிறது. எல்லாவிதமான வியாபாரங்களும் இம் மேளாக்களில் நடைபெறும்.

சாந்திநிகேதனுக்கு வரும் ஒவ்வொரு யாத்திரிகரும் ஸ்ரீநிகேதனுக்குப் போகத் தவறுவதில்லை. சாந்திநிகேதனுக்கு வருங்காலத்தில் எவ்வளவு இடம் இருக்கிறதோ அதைவிட முக்கியமான இடம் ஸ்ரீநிகேதனுக்கும் உண்டு. சாந்திநிகேதனில் எண்ணங்களால் வாழ்க்கையைத் திருத்தும் பணி மேற் கொள்ளப்பட்டுள்ளது. ஸ்ரீநிகேதனில் செயலால், தொழில்முறையால் எண்ணங்களைச் செம்மைப்படுத்தும் பணி இடம் பெற்றிருக்கிறது.

# பிரிட்டனில் முதியவர் கல்வி

பிரிட்டிஷ் நகரங்களில் முதியவர்களுக்காக பல கல்வி நிலையங்கள் உள. தொழில், விஞ்ஞானம் கலை எனப் பல துறைகளில் போதனை நடக்கிறது. சுமார் இருபது லட்சம் மக்கள் இரவு நேரத்தில் கற்கிறார்கள்.

லண்டன் கவுண்டி கௌன்ஸில் நிர்வாகத்திலுள்ள இரவுப் பள்ளிக்கூடங்களில், இவ்வாண்டில் 2,50,000 மாணவர்கள் இருக்கிறார்கள். சிறு பிராயத்தில் கல்வி கற்கத் தவறியவர்களுக்கு எழுதப் படிக்க வாய்ப்புத் தரும் நோக்கத்துடன் இரவுப் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. ஆனால் சமீப காலங்களில் இவற்றின் சேவையும் தரமும் உயர்ந்து விட்டன. உயர்தரக் கல்வியில் நாட்டமுள்ளவர்களும், தொழில்-கலைப்பயிற்சியில் அக்கறையுள்ளவர்களும் இரவுப் பள்ளிகளில் கூடுகிறார்கள். பொழுது போக்குடன் அறிவு வளர்ச்சியும் அங்கு கிடைக்கிறது.

இரவுப் பள்ளிக்கூடங்களில் திட்டவட்டமான போதனு முறை கிடையாது. உயர்தரக் கல்விக்காகப் படிப்பவர்கள் நிலை வேறு. பொழுதுபோக்காகவும் கற்கும் ஆவலுடனும் வருபவர்களுடைய நிலை வேறு. ஆசிரியர்-மாணவர் என்ற பேதமின்றி எல்லோரும் சகஜமாகப் பழகும் சூழ்நிலை அங்கு உண்டு. லண்டனிலுள்ள ஒரு கல்வி நிலையத்தில் மலை ஏறும் பயிற்சி அளிக்கப்படுகிறது. கயிற்றைப் பிடித்துக் கொண்டு தொத்தி ஏற விதம்வித மான பயிற்சிகள் உண்டு. வார முடிவில், மலைப் பிரதேசங்களுக்கு மாணவர்களும் ஆசிரியர்களும் சென்று நிதர்சனப் பயிற்சியில் ஈடுபடுவார்கள்.

நடுத்தர வயதுள் ளமாதர்கள் இரவுப் பள்ளிகளில் நடனமாடக் கற்றுக் கொள்கிறார்கள். பகல் முழுதும் தொழிற்சாலையிலோ, வீட்டிலோ, காரியாலயத்திலோ உழைத்துவிட்டு இரவு நேரத்தில் பள்ளிக்கு வருகிறார் கள். புதிதாக ஒன்றைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஒவ்வொரு ஆங்கிலேயனிடமும் இருக் கிறது. அதை ஒழுங்குபடுத்திச் சிறப்புறச் செய்ய முதிய வர் கல்விநிலையங்கள் பணியாற்றுகின்றன. இரவு நேரப் பயிற்சி வகுப்புகளில் திட்டமான போதனை கிடையாது. அவரவர் ஆற்றலை உணர்ந்து போதிக்கப்படுகிறது. இதனால் மாணவர்களும் உற்சாகங் காட்டுகிறார்கள்.

சித்திர வேலை, பூ நூல் பின்னுதல், தையல், சமை யல், வீட்டு அலங்காரம் எனப் பலதுறைகளில் வகுப்புக் கள் உண்டு. சங்கீதம், நடனம் முதலிய துறைகளில் கோஷ்டிப் பயிற்சிக்கும் வாய்ப்புண்டு. லண்டனிலுள்ள மேரில்போன் கழகத்தில் வாத்திய கோஷ்டிப் பயிற்சி தரப்படுகிறது. அந்தக் கழகத்திற்கு அருகில் வசிக்கும் எஸ்தோனியர்களில் சிலர் தங்களுடைய நாட்டு நடனத் தில் பயிற்சிபெற விரும்பினார்கள். அவர்களுடைய மொழி யில் வகுப்பு நடத்தவும் பயிற்சி தரவும் எஸ்தோனிய நடன ஆசிரியரை, கழக நிர்வாகிகள் நியமித்தார்கள்.

முதியவர்கள் பரீட்சையில் வெற்றிபெறும் ஆவலு டன் படிப்பதில்லை. கற்றதை மறக்காமலிருக்க ஒவ்வோர் ஆண்டிலும் படித்ததைப் படிப்பதில் சிலருக்கு ஆசை யுண்டு. மனைவியின் தூண்டுதலால் பள்ளிக்குச் செல்லும் கணவனையும் மனைவிக்குக் கல்வி வசதி தரும் ஆவ லுள்ள கணவனையும் இந்தப் பள்ளியில் சந்திக்க முடியும். கல்யாணமான தம்பதிகள் பள்ளியில் சேர் கிறார்கள். மனைவிக்கு வீட்டை அலங்கரித்து வைத்துக் கொள்வதில் ஆசை. அவள் பயிற்சி பெற வருகிறாள்.

கணவன் தச்சு வேலை கற்றுக்கொண்டால் தனக்கு உதவியாக யிருக்கும் என்று கருதி அவனையும் அழைத்து வருகிறாள். இம்மாதிரி கல்வியில் ஆசையுள்ள தம்பதிகள் பலர். நடுத்தரப் பிராயங் கடந்த பலர், உத்சாகத்துடன் சங்கீதமும், நடனமும் பயிலுகிறார்கள். இவ்வாண்டு, எண்பது பிராயங் கடந்த மூன்று மூதாட்டிகள் சித்திரங் கற்க வந்திருக்கிறார்கள்.

லண்டனிலும் புறநகரிலும் நகரசபை நிர்வாகத்தில் 133 இரவுப் பள்ளிகள் உள. இங்கு போதிக்காத பாடமே இல்லை. உலகிலுள்ள எந்த மொழியையும் இங்கு கற்கலாம். நாட்டியம், கூத்து, பொம்மலாட்டம்—எதை வேண்டுமானாலும் பயில வசதியுண்டு. கலாசார நிகழ்ச்சிகளில் பயிற்சி பெறவும் பொழுது போக்குக்கான தொழில்களில் ஈடுபடவும் வாய்ப்பு உண்டு. கணக்குத் தணிக்கை, தச்சு, வர்ணம் பூசுதல், யந்திர நுட்பம் எனப் பல தொழில்களைப் பயில முடியும்.

லண்டனைப் போல, பிரிட்டன் முழுவதிலும் கல்வித் துறையில் தனிக் கவனம் செலுத்தப்பெறுகிறது. பள்ளிப் பருவத்தினருக்குக் கட்டாயக் கல்வி வசதியும், மற்றவர்களுக்கு அறிவு வளர முழுநேரப் பள்ளிகளும் இரவுப் பள்ளிகளும் அமைக்க 1944-ல் சட்டமியற்றப் பட்டது.

முதியவர் கல்வியில், நகராட்சி மன்றங்களைப்போல பல்கலைக் கழகங்களும் அக்கறை காட்டுகின்றன. பிரிட்டனிலுள்ள 21 பல்கலைக் கழகங்கள் உயர்தரப் படிப்புக்காக மாலைநேர வகுப்புக்களை நடத்துகின்றன. இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் நிறுவப்பட்ட தொழிலாளர் கல்விச் சங்கம் முதியவர் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டுகிறது. நாடு முழுவதிலும் இதற்கு 950 கிளைகள் உண்டு. தொழிலாளர்களுக்குக் கல்வி வசதி தரும் நோக்கத்துடன் இந்தச் சங்கம் அமைக்கப்பட்டது. ஆனால்

இன்று குமாஸ்தாக்களும், கடைச் சிப்பந்திகளும் வேறு பலரும் இந்தச் சங்கத்தின் உதவியால் கல்வி பெற முடிகிறது. இவ்வாண்டில் இரவுப் பள்ளிகளில் பயிலுவோர் எண்ணிக்கை ஏறக்குறைய 2,000,000. மத ஸ்தாபனங்களிலும் தொழிற்சாலைகளிலும் நடக்கும் வகுப்புக்களில் கற்போர் எண்ணிக்கை இதில் சேரவில்லை. முதியவர்களுக்காக பி. பி. ஸி. நடத்தும் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து முன்னேறுவோர் பலர்.

கல்வி நிலையங்களின் நிர்வாகச் செலவில் பெரும் பகுதியை சர்க்காரே ஏற்றுக்கொள்கிறது. பல்கலைக் கழகங்களும் தொழிலாளர் கல்விச் சங்கமும் நடத்தும் வகுப்புக்களுக்கு ஆகும் செலவில் 70 சதத்தை சர்க்கார் ஏற்றுக் கொள்கிறது. உள்ளூர் வரிகள் மூலம் 10 சதம் வசூலிக்கப்படுகிறது. நன்கொடை மூலம் 20 சதம் சரிக்கட்டப்படுகிறது.

பிரிட்டனில் எல்லோருக்குமே கல்வித்துறையில் ஆர்வம் உண்டு. வயது வந்த ஒவ்வொருவரும் கற்றுத் தெளிந்து வாழ ஆசைப்படுகிறார்கள். பயிலுவோரும் பயிற்றுவோரும் ஆர்வமுடன் இருக்கிறார்கள். லண்டன் ஸென்ட் பாங்ராஸிலுள்ள 'ஒர்க்கிங்மென்ஸ் காலேஜி' லுள்ள ஆசிரியர்கள் ஊதியம் பெறுமலே உழைக்கிறார்கள். சமீபத்தில் அந்தக் கல்லூரி, நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிற்று. அப்போது புதிய கட்டிடம். சாதன வசதிகளை சேர்க்கவும் நிதி திரட்டினார்கள் பொது மக்கள் தாராளமாக உதவினார்கள். 50,000 பவுன் வசூலாயிற்று.

# அஸ்ஸாம் காட்டு மிருகங்கள்

வன விலங்குகள், பிராணிகளை விரும்புபவர்களுக்கு அஸ்ஸாம் ஒரு ஆனந்தமய சுவர்க்க பூமியாகும். ஆசியாக் கண்டத்திலேயே அதிக வகையான பிராணிகளை இங்கு தான் காணலாம். ஆப்ரிக்காவுக்கு வெளியில் உலகில் வேறெங்குமே இங்கு உள்ளது போல் பலவகை மிருகங்கள், பறவைகள், பாம்புகள், முதலியன கிடையாது.

உலகில் அருமையாகக் கிடைப்பதும், விசேஷமானதுமான மிருகங்களில் ஒற்றைக் கொம்பு உள்ள இந்தியக் காண்டா மிருகம் ஒன்று; இதற்கு முக்கியமான இருப்பிடம் அஸ்ஸாம். இந்த விசித்திர விலங்குகள் இங்கு அதிகமாக இருக்கின்றன.

மற்றும் யானை, காட்டெருமை, விசேஷரக மானினங்கள், பெரிய அலகுகள் கொண்ட பலவினப் பறவைகள், நாகப் பாம்பு முதலிய பலவகைப் பாம்புகள் ஆகியவை அஸ்ஸாம் காடுகளில் ஏராளமாக வளர்ந்து வருகின்றன. பெயர் பெற்ற வங்காளப் புலிகளும், சிறுத்தைகளும் இங்கு கிடைக்கின்றன. யானைகள் மிக அதிகமாகக் காணப்படும் இடம் பர்மாவுக்கடுத்தபடி அஸ்ஸாம் தான்.

### விசேஷ விசித்திரப் பிராணி

உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் அஸ்ஸாமுக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளின் மனதை முக்கியமாகக் கவர்வது ஒற்றைக் கொம்புடைய காண்டா மிருகம் தான். காண்டா மிருக ஜாதியில் இவைகள் மிகப் பெரியவை

களாக இருக்கின்றன. இது அஸ்ஸாம் ராஜ்யத்தின் சின்னமாகவும் விளங்குகிறது. ஒரு காலத்தில் இவை ஏராளமாகக் கிடைத்து வந்தன; அப்பொழுது இவை பழக்கப்படுத்தப்பட்டு அஸ்ஸாம் மக்களால் உழவுக்கு உபயோகப்படுத்தப்பட்டு வந்தன; இவற்றைப் போர்களில் சண்டையிடுவதற்கும் மக்கள் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள் என்பதற்கும் அத்தாட்சிகளுள்ளன; இன்றும் உள்ள பல பண்டைச் சித்திரங்களில் காண்டா மிருகத்தின் கொம்புகள் மீது பெரிய ஈட்டிகள் வைக்கப்பட்டிருக்கும் காட்சிகள் தீட்டப்பட்டிருக்கின்றன.

மனிதனின் நில ஆசை, உணவு வேட்டை, தன் வீர பராக்கிரமச் செயல்களுக்கான சின்னங்களைச் சேகரித்துப் பிறர் அறியப் பெருமையுடன் காட்ட வேண்டுமென்ற அவா ஆகியவற்றின் விளைவாக இவைகள் பெருவாரியாகக் கண்ட கண்டபடி கொல்லப்பட்டன. ஒரு காலத்தில் இவ்வினம் அடியோடு மறைந்து விடுமோவென்று கூட நினைக்க வேண்டியிருந்தது. டென்மார்க்கைச் சார்ந்த பெங்ட் பெர்ஜ் என்ற இயற்கை வனப் படப் பிடிப்பாளர் 1933-ம் ஆண்டில் தான் எழுதிய "காண்டா மிருகத்தின் அடிச்சுவடு" என்ற புத்தகத்தில், இன்னும் நூறு வருஷங்களில் இம்மிருகத்தின் எலும்புக்கூடும் இதர பல பண்டைக்காலப் பிராணிகளின் எலும்புக்கூடுகள்போல் பொருட்காட்சிசாலைகளில் இடம் பெற்றுவிடும் என்று மிக மனமுடைந்து வருத்தத்துடன் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் சென்ற நூறு வருஷ காலத்தில் இவ்வன விலங்குகள் விரைவில் மறைந்து வந்ததைப் பார்த்தால் இவைகளைப் பாதுகாக்கும் முயற்சி வீண் தான் எனக்கூடத் தோன்றிற்று.

அஸ்ஸாமில் காட்டு மிருகங்களைக் காப்பாற்றித் தனிப்பட்ட வனப் பிரதேசங்களில் பாதுகாத்துப் பராமரிப்

பதற்கான முயற்சிகள் இந்த நூற்றுண்டில் 1930-ம் வருஷவாக்கில் தொடங்கின. இப்பொழுது முக்கியமாகக் காண்டா மிருகங்களைப் பாதுகாப்பதற்காக பூரண கால வனப் பாதுகாப்பு நிலையங்கள் நான்கு உள்ளன; தவிர இவற்றின் பாதுகாப்புக்காக ஒரு பிரத்தியேக ரிசர்வ் காடு களும் இருக்கின்றன. இவற்றில் காண்டா மிருகங்கள் பாதுகாப்படைவதுடன் காட்டெருமைகள் விசேஷ மரங் கள் முதலியவையும் வீண் சேதத்துக்குட்படாமல் பாது காப்புப் பெறுகின்றன. இவைகளின் பாதுகாப்புக்கும், பராமரிப்புக்கும் அஸ்ஸாமில் மொத்தம் 464 சதுர மைல் வனப் பிரதேசம் பிரத்தியேகமாக ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளது.

அஸ்ஸாமுக்கு உல்லாசப் பிரயாணிகள் அதிக அள வில் வருவதை முன்னிட்டு இந்த வன விலங்குகளின் பாதுகாப்புப் பிரத்தியேகப் பகுதிகளின் அபிவிருத்திக்காக அஸ்ஸாம் ராஜ்ய சர்க்கார் முதலாவது ஐந்தாண்டுத் திட் டத்தில் ஆரம்பச் செலவுக்காக ரூபாய் 19,000 ஒதுக்கி வைத்தனர்; இத்தொகை இவ்விடங்களில் குளிர்கால ரஸ்தாக்கள், பரிசோதனைப் பாதைகள் போடவும், காட்டு; மிருகங்களைக் காண்பதற்காக மரங்களின் உச்சியில் குடில் கள் அமைத்தல் போன்ற காரியங்களுக்கும் செலவிடப் படும்.

காஸிரங்கா

அஸ்ஸாமில் காட்சிக்கினிய பகுதி சிப் ஸாகர் ஜில்லா விலுள்ள காஸி ரங்கா வன விலங்குகள் பாதுகாப்பு நிலை யப் பிரதேசமே. இப்பிரதேசத்துக்குத் தெற்கே மிக்கிர் மலைகளும், வடக்கே பிரம்மபுத்திரா நதியும் உள்ளன; விஸ்தீரணம் 166 சதுர மைல்; கல்கத்தாவிலிருந்து இவ் விடத்துக்கு விமானம் மூலம் வெகு இலகுவாய்ப் போய்ச் சேரலாம்.

இவ்வனப் பிரதேசத்தினுள் புகுவதற்கான வாயிலில் கஹாராவென்னு மிடத்தில் இதைப் பார்க்க வரும் உல்லாசப் பிரயாணிகள் தங்குவதற்காக ஐந்து அறைகள் கொண்ட வனமாளிகை ஒன்று சமீபத்தில் கட்டப்பட்டது; இங்கு நவீன முறையில் உணவு முதலிய வசதிகளுக்கும் வழி செய்யப்பட்டிருக்கிறது.

இந்தப் பாதுகாப்புக் காட்டிலுள்ள காண்டா மிருகங்களையும் இதர காட்டு மிருகங்களையும் யானை மீது ஏறிக்கொண்டே கிட்ட இருந்தே பார்க்கலாம்; இதற்கெனவே அனுபவப்பட்ட மாவுத்தர்களின் ஆதரவில் பல யானைகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

கஹாரா வன மாளிகையில் வைக்கப்பட்டிருக்கும் பிரயாணிகள் குறிப்புப் புத்தகத்தில் இருந்து இங்கு விஜயம் செய்த எந்த உல்லாசப் பிரயாணியும் அதிருப்தியுடன் திரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. விசித்திர மிருகமான காண்டா மிருகத்தை யாரும் பார்க்காமலிருக்க முடியாது; இதுவும் யானையைப்போல் நூறு வருஷங்கள் வாழக்கூடியது; காட்டுப் பன்றியைப்போல், ஆனால் அதை விடப் பெரிய அளவான வாயும், மூக்கும் இதற்கு இருக்கிறது. இதன் தேகம் மிகவும் கரடு முரடாக உள்ளது; இதன் பாதங்கள் யானையின் பாதங்கள் போல, ஆனல் சிறியவைகளாக இருக்கின்றன. இந்தப் பாதுகாப்பு வனத்தில் சுமார் 250 முதல் 300 காண்டா மிருகங்களிருக்குமென்று தோராயமாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றும் யானைகள் 300-ம், காட்டெருமைகள் 500-ம் நான்கு இன மான் கூட்டங்களும், குறைந்த பட்சம் அரை டஜன் வங்கப் புலிகளும், இக்காட்டில் இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. வன விலங்குகளைப் பார்த்து மகிழ விரும்புபவர்கள், இயற்கை எழிலைக் கண்டுகளிக்க ஆசைப்படுபவர்கள் இவைகளைக் காண்பதற்காக, இக்காட்டெல்லைக்

குள் உட்புறத்தில் மர உச்சிகளில் தாற்காலிகமான குடில்கள் மூன்று கட்டிவைக்கப் பட்டிருக்கின்றன; இதில் ஒன்று 10 மைலுக்கு உட்பிரதேச இடத்தில் அமைக்கப் பட்டிருக்கிறது.

மானஸ் பிராணிகள் பாதுகாப்பு வனப் பிரிவு

வன விலங்குகளின் பாதுகாப்புக்கான இரண்டாவது பெரும் வனப்பகுதி காமரூப ஜில்லாவில் பிரம்மபுத்ரா நதியின் வடகரையில் மானஸ் வன விலங்குகள் பாதுகாப்பு ஆரண்யம் என்ற பெயரில் உள்ளதாகும்; இதன் விஸ்தீரணம் 105 சதுர மைல்களுக்கும் அதிகமாகவே இருக்கிறது; இது காஸிரங்கா வனத்தைவிட விசேஷ கவர்ச்சியுள்ளது.

இவ்வாரண்யம் இமய மலைச்சாரலில் பூட்டான் குன்றுகளின் அடிவாரத்தில் இருக்கிறது; இதற்கு ஒரு பக்கத்தில் அழகிய மானஸா நதி ஆனந்தமாக ஓடிக் கொண்டிருக்கிறது; இந்நதிக் கரையிலே தங்குவதற்கும், மீன் பிடிப்பதற்கும் ஏற்ற இடங்கள் பல உள்ளன. இந்த விலங்குகள் பாதுகாப்பு வனத்தில் யானைகள், காட்டெருமைகள், காண்டா மிருகங்கள், கரடிகள், புலிகள், காட்டுப் பன்றிகள், குலைக்கு மான் உள்பட பலவித மான்கள், முதலிய மிருகங்கள் இருக்கின்றன. இதற்குச் செல்லுவதற்கான ரயில்வே ஸ்டேஷன் பார்பிட்டா ரோடு; இந்த ரயில்வே நிலையத்திலிருந்து இக்காட்டுக்கு மோட்டார் காரில் போவதற்கு ஏற்ற குளிர்கால ரஸ்தா ஒன்றிருக்கிறது.

மூன்றாவது விலங்குகள் பாதுகாப்பு வனம் டர்ராங் ஜில்லாவில் சோனாய் ரூப்பாயில் இருக்கிறது. மானஸ் பாதுகாப்புக் காட்டைப் போலவே இதுவும் ஹிமாலய மலையின் அடிவாரத்திலிருக்கிறது; இதிலும் காண்டா

மிருகங்கள், யானைகள், காட்டெருமைகள், முதலிய பல காட்டு மிருகங்கள் வதிகின்றன. இதற்கு ரங்கபாரை ரயில்வே ஸ்டேஷனிலிருந்தும், டெஸ்பூர் விமான நிலையத்திலிருந்தும் எல்லாப் பருவ காலங்களிலும் மோட்டாரில் போகக்கூடிய ரஸ்தாக்கள் மூலம் செல்லலாம்.

நான்காவது வன விலங்குப் பாதுகாப்பு ஆரண்யம் பாபா அல்லது மில்ராய் காட்டெருமைப் பாதுகாப்பு வனமென்று அழைக்கப்படுகிறது; இதன் விஸ்தீரணம் 19 சதுர மைல்; இது வட லக்கிம்பூரிலுள்ளது. இது விசேஷமாகக் குறிப்பிடப்பட வேண்டியதோர் இடமாகும். இது அஸ்ஸாமில் காணப்படும் சிறந்த இனக் காட்டெருமைகளின் பாதுகாப்புக்கெனவே ஒதுக்கப்பட்டுள்ள காடாகும்.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at
Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18